بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 18

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - துல்கஅதா 12

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஷஹாதத் 30 ★ 30 ஏப்ரல் - 2026


## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا كُوۡنُوۡا قَوّٰمِيۡنَ لِلّٰهِ شُهَدَآءَ بِالۡقِسۡطِ وَلَا يَجۡرِمَنَّكُمۡ شَنَاٰنُ قَوۡمٍ عَلٰٓى اَلَّا تَعۡدِلُوۡا اِعۡدِلُوۡا هُوَ اَقۡرَبُ لِلتَّقۡوٰى وَاتَّقُوا اللّٰهَ اِنَّ اللّٰهَ خَبِيۡرٌۢ بِمَا تَعۡمَلُوۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் மீதான பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இது தான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (5:9)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி — உடன்படிக்கையை பேணுதலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிகரற்ற முன்மாதிரியும்

عَنِ الحَسَنِ بۡنِ عَلِيٍّ بۡنِ اَبِيۡ رَافِعٍ رَضِيَ اللّٰہُ عَنۡہُ اَنَّ اَبَا رَافِعٍ اَخۡبَرَہٗ قَالَ: بَعَثَنِیۡ قُرَیۡشٌ اِلٰی رَسُوۡلِ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ فَلَمَّا رَاَیۡتُ رَسُوۡلَ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ اُلۡقِیَ فِیۡ قَلۡبِیَ الۡاِسۡلَامُ فَقُلۡتُ: یَا رَسُوۡلَ اللّٰہِ! اِنِّیۡ وَاللّٰہِ! لَا اَرۡجِعُ اِلَیۡہِمۡ اَبَدًا ۔ فَقَالَ رَسُوۡلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ اِنِّیۡ لَا اَخِیۡسُ بِالۡعَہۡدِ وَلَا اَحۡبِسُ الۡبُرُدَ وَلٰکِنِ ارۡجِعۡ ۔ فَاِنۡ کَانَ فِیۡ نَفۡسِکَ الَّذِیۡ فِیۡ نَفۡسِکَ الۡاٰنَ فَارۡجِعۡ قَالَ: فَذَہَبۡتُ ثُمَّ اَتَیۡتُ النَّبِیَّ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ فَاَسۡلَمۡتُ ۔ (ابوداؤد کتاب الجهاد باب فی الامام یستجن به فی العهود)

ஹஸ்ரத் ஹஸன் பின் அலீ பின் அபி ராஃபி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் அன்னாரிடம் அபூ ராஃபி அவர்கள் இதனை கூறியிருந்தார்கள்: குறைஷிகள் என்னை தூதுவராக ஆக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அனுப்பினார்கள். நான் ஹுஸுர் (ஸல்) அவர்களை பார்த்தபோது, இஸ்லாத்தின் உண்மைத்துவம் எனது உள்ளத்தில் குடி கொண்டு விட்டது. அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இறைவனின் மீது ஆணையாக! தற்போது நான் அவர்களின் பக்கம் ஒருபோதும் திரும்பி செல்ல மாட்டேன் என்று நான் ஹுஸுர் (ஸல்) அவர்களிடம் கூறினேன். அதற்கு, ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உடன்படிக்கைகளுக்கு எதிராக செயல்பட மாட்டேன்; மேலும் தூதுவரை நிறுத்தி வைப்பதை உகந்ததாகவும் நான் கருதவில்லை. நீர் திரும்பி சென்று விடும்; அதுவே சிறந்ததாகும். மேலும் உமது உள்ளத்தில் தற்போது எந்தத் தன்மை இருக்கின்றதோ அதே தன்மை அங்கு சென்ற பிறகும் உள்ளது என்றால் நீங்கள் திரும்பி வந்து விடுங்கள். கூறுகின்றார்கள்: ஆக நான் குறைஷிகளிடம் திரும்பிச் சென்றேன். மேலும் அவர்களிடம் நடந்த உரையாடலை கூறினேன். அதன் பிறகு நான் மதினா திரும்பி வந்து இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டேன்.

* * * * * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள் — எதிரி சமுதாயத்தின் மீதான பகைமையானது உங்களை நீதம் செய்வதிலிருந்து தடுக்க வேண்டாம்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மையின் வழி நடக்காமல் பெற முடியாத நீதியை குறித்து அல்லாஹ் لَا يَجۡرِمَنَّكُمۡ شَنَاٰنُ قَوۡمٍ عَلٰٓى اَلَّا تَعۡدِلُوۡا اِعۡدِلُوۡا هُوَ اَقۡرَبُ لِلتَّقۡوٰى என்று கூறியுள்ளான்: எதிரி சமுதாயத்தின் மீதான பகைமை உங்களை நீதம் செய்வதிலிருந்து தடுக்க வேண்டாம். நீங்கள் நீதியில் நிலை நில்லுங்கள்; அதில் தான் இறையச்சம் உள்ளது. எந்த சமுதாயம் மக்கத்து காபிர்கள் செய்ததைப் போன்று அநியாயமாக துன்பமிழைக்கின்றதோ, மேலும் பிறருக்கு இன்னல்கள் கொடுக்கின்றதோ, கொலை பாதகங்களை செய்கின்றதோ, மேலும் குழந்தைகளையும், பெண்களையும் கொலை செய்கின்றதோ, மேலும் போர்களில் இருந்து விலகவில்லையோ அப்படிப்பட்ட மக்களுடனான விவகாரங்களில் நீதியுடன் நடந்து கொள்வது எந்த அளவு கடினமானதாகும் என்பதை தற்போது நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் திருக்குர்ஆன் போதனை அப்படிப்பட்ட உயிர் பகைவர்களின் உரிமைகளையும் கூட புறக்கணிக்கவில்லை. மேலும் நீதி மற்றும் நேர்மையுடன் நடக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. நான் உண்மையாகவே கூறுகின்றேன்: கடினத்துடன் நடந்து கொள்வது எளிதாகும். ஆனால் எதிரிகளின் உரிமைகளை பாதுகாப்பதும், வழக்குகளில் நீதியுடனும், நேர்மையுடனும் நடந்து கொள்வதும் மிகவும் கடினமானதாகும். அது முற்றிலும் தைரிய மிக்க நபர்களின் பணியாகும். (நூருல் குர்ஆன் நம்பர் 2, பக்கம் 21 - 22)

* * * * * * * * * *

## தஃப்ஸீரே கபீரிலிருந்து — எதிரி செய்த தீமைக்கு மிகச் சிறந்த நன்னடத்தையைக் கொண்டு பதிலளியுங்கள்

اِدۡفَعۡ بِالَّتِیۡ ہِیَ اَحۡسَنُ السَّیِّئَۃَ ؕ نَحۡنُ اَعۡلَمُ بِمَا یَصِفُوۡنَ (அல்மூஃமின்:97)

இந்த வசனத்தின் விளக்கவுரையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த இடத்தில் இந்த விஷயமும் கற்றுத் தரப்பட்டுள்ளது அதாவது எதிரி அநீதியாளனாக இருந்த போதிலும் அவனுக்கு எதிராக நீங்கள் நன்மை மற்றும் மன்னிப்புடன் செயல்பட வேண்டும். ஏனென்றால், தீமைக்கு பகரமாக நன்மை செய்வது மன உறுதி மிக்க நபிமார்களின் பணியாகும். மேலும், எதிரியோ அநீதி இழைத்து இருக்கின்றான்; மேலும் நான் என்னுடைய கருணையால் தண்டனையிலிருந்து தப்பித்து விட்டால், பிறகு மீண்டும் அவன் ஏதாவது தீங்கிழைத்து விடுவான் என்ற எண்ணம் வந்து விடக்கூடாது. ஏனென்றால் அல்லாஹ் கூறுகின்றான்: நான் அவனுடைய ஒவ்வொரு திட்டத்தையும் அறிகின்றேன். எந்த விஷயமும் எனது கூலி மற்றும் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது. மற்றோர் இடத்தில் அல்லாஹ் இதன் நுட்பமான ஞானத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றான்: இதன் விளைவு இவ்வாறாக அமையும்: அதாவது எவருடன் உமக்கு பகைமை இருக்கின்றதோ அந்த நபர் உன்னுடைய இந்த அழகிய நடத்தையைக் கண்டு வெட்கத்திற்கு ஆளாகிவிடுவார். மேலும் அவர் உமது நெருங்கிய நண்பராக ஆகி விடுவார். (தஃப்ஸீரே கபீர், தொகுதி8,பக்கம் 96 -97)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰہِ

## அமைதிக்காக தவிக்கும் உலகம்!

அமெரிக்கா இஸ்ராயில் மற்றும் ஈரானுக்கிடையிலான போர் துவங்கி ஒரு மாதத்திற்கும் மேலாகிவிட்டது இந்த போர் துவங்குவதற்கு முன்பு, சில நாட்களில் இது முடிவிற்கு வந்துவிடும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் அரசியல் வல்லுனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் அனுமானத்திற்கு எதிராக இந்தப் போர் நீளமாக மட்டும் நீடிக்கவில்லை; மாறாக, உயிர் இழப்பு மற்றும் பொருளாதார இழப்பு இஸ்ரேல் மற்றும் ஈரானின் எல்லைகளைக் கடந்து அந்தப் பகுதியின் மற்ற வளைகுடா நாடுகள் வரை பரவி இருக்கின்றது. அரபு நாடுகளும், இஸ்ரேலும், ஈரானும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் உயிர் அபாயத்தில் உள்ளன. தற்போது வரை ஈரான், இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளின் ஆயிரக்கணக்கான ராணுவத் தளங்கள் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன. மேலும் தற்போது ஏனைய ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும், இதில் நமது பாரத தேசமும் அடங்கும். இங்கு எண்ணெய் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது மேலும் விலைவாசி உயர்வும் ஏற்படும் அபாயம் உள்ளது. ஹார்மூஸ் நீரிணை மற்றும் செங்கடல் வழிப்பாதையின் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதால் பெருமளவிலான பொருளாதார இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதன் பாதிப்புகளை ஆசிய நாடுகளும் எதிர் கொண்டு வருகின்றன. அத்துடன் ஐரோப்பிய நாடுகளின் சில நாடுகளும் பாதிப்படைந்து வருகின்றன. இந்தப் போர் நீண்ட காலம் வரை தொடர்ந்து நடந்து கொண்டு இருந்தால், பின்னர் அது உலகப் போராக மாறக்கூடிய வலிமையான சாத்திய கூறுகள் இருக்கின்றன. வல்லுனர்களின் பார்வையில், இந்த போரில் AI பயன்பாடு இதனை மேலும் அபாயகரமானதாக ஆக்கிவிடும். போரில் தார்மீக ஒழுக்க நடைமுறைகளும் பேணப்படுவதில்லை; மனித நேயமும் கைக்கொள்ளப்படுவதில்லை. அமெரிக்க அதிபரின் தற்போதைய அறிக்கையில் இருந்து மிகத் தெளிவாக தெரிய வருவது என்னவென்றால், அவர் இரண்டிலிருந்து மூன்று வாரங்களுக்குள் இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு முடிவெடுத்துள்ளார். ஆனால், சர்வதேச மட்டத்தில் அவருடைய முந்தைய கூற்றுகளை கருத்தில் கொண்டு பார்த்தால், இது தொடர்பாக எந்த விதமான இறுதியான கருத்தையும் நம்மால் கூற முடியாது.

ஈரான் மற்றும் அமெரிக்கா தற்போது தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஒருமித்த கருத்துக் கொண்டுள்ளன. ஆனால், அது நிலைபெற்று இருப்பது தொடர்பாக நாம் உறுதியாக எதனையும் கூற முடியாது. ஏனென்றால் தொடக்கம் முதலே இதில் அபாய மேகங்கள் சூழ்ந்து இருக்கின்றன.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஸாஹிப் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பாக இது தொடர்பாக பிரிட்டிஷ் பார்லிமென்ட், ஜெர்மனி இராணுவ தலைமையகம், கேபிட்டல் ஹில் வாஷிங்டன் டிசியில் காங்கிரஸ் மற்றும் செனட் சபை உறுப்பினர்கள் கூட்டம், இதே போன்று ஐரோப்பியன் பார்லிமென்ட் போன்ற பல்வேறு இடங்களில் உலகப் போர் குறித்த அபாயங்களை உணர்ந்தவாறு உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக உரைகளை நிகழ்த்தி வந்தார்கள். இதேபோன்று இஸ்ரேல், ஈரான் மற்றும் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளின் அதிபர்களுக்கும் ஆழ்ந்த சிந்தனைக்குரிய கடிதங்களை எழுதி, இது தொடர்பாக கவனமூட்டினார்கள். இந்த உரைகளும், கடிதங்களும் இன்றும் உலக மக்களுக்கு செயற்களத்தின் பக்கம் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றன.

இன்றிலிருந்து 14 ஆண்டுகளுக்கு முன்பு பிப்ரவரி 26 ஆம் தேதி 2012 ஆம் ஆண்டு இஸ்ரேல் பிரதமர் நெதன் யாகூ அவர்களுக்கு அனுதாபம் நிறைந்த கடிதம் ஒன்று எழுதி இருந்தார்கள். அதில் அன்னார் கூறுகின்றார்கள்:

நீங்கள் ஈரானைத் தாக்கத் தயாராகி வருவதாக இன்று செய்திகளை நாங்கள் செவிமடுத்து வருகிறோம். இருப்பினும், ஒரு உலகப் போரின் கொடூரமான விளைவுகள் உங்கள் கண் முன்னே இருக்கின்றன. கடந்த உலகப் போரில், எங்கு மில்லியன் கணக்கான மக்கள் மாண்டு போனார்களோ அங்கு இலட்சக்கணக்கான யூதர்களின் உயிர்களும் வீணடிக்கப்பட்டன.

ஒரு நாட்டின் பிரதம மந்திரி என்ற முறையில், உங்கள் தேசத்தின் மக்களின் உயிரைப் பாதுகாப்பது தங்களின் கடமையாகும். இனி அடுத்த உலகப் போர் என்பது இரண்டு நாடுகளுக்கு இடையே மட்டும் நிகாழாது. மாறாக பல்வேறு நாடுகளின் கூட்டணிகள் (blocs) உருவாகும் என்பதை உலகின் தற்போதைய சூழ்நிலைகள் காட்டுகின்றன. உலகப் போர் வெடிப்பதற்கான அபாயம் மிகவும் கடுமையாக முன்னால் வந்து கொண்டிருக்கின்றது. இதனால் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள் என அனைவரது உயிர்களும் ஆபத்தில் உள்ளன. அத்தகைய போர் ஏற்பட்டால், அது மனித அழிவிற்கான ஒரு தொடர் விளைவை ஏற்படுத்தும். இந்தப் பேரழிவின் பாதிப்புகளால் வருங்கால சந்ததியினர் ஊனமுற்றவர்களாகவோ அல்லது முடமானவர்களாகவோ பிறக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இதன் காரணம் என்னவென்றால், அடுத்த (உலகப்) போரில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும்.

எனவே, உலகை போரின் பிடிக்குள் தள்ளுவதற்குப் பகரமாக, மனிதகுலம் உலகளாவிய பேரழிவிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு தங்களால் முடிந்த உச்சபட்ச முயற்சிகளை தாங்கள் மேற்கொள்ளுமாறு நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பரஸ்பர பிரச்சனைகளை வலிமையை பயன்படுத்தி தீர்ப்பதற்குப் பகரமாக, அவற்றை பேச்சுவார்த்தை மூலமாக தீர்க்க முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் நமது வருங்கால சந்ததியினருக்கு வேதனை மிக்க எதிர்காலத்தை வழங்காதவர்களாக நாம் திகழ்வோம்; மேலும் நாம் அவர்களுக்கு உடல் ஊனம் மற்றும் குறைபாடுகளை அவர்களுக்கு 'பரிசாக' அளிக்கக் கூடியவர்களாக இருக்க மாட்டோம்.(ஹுஸுர் அவர்களின் ஆங்கில கடிதத்தின் மொழியாக்கம்)

இதேபோன்று ஹுஸுர் அன்வர் அவர்கள் அதே நாட்களில் ஈரான் அதிபருக்கும் கடிதம் எழுதியிருந்தார்கள். அதன் சில பகுதிகளும் வாசகர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது:

உலகில் உருவாகி வரும் அபாயகரமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, தங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுவது அவசியம் என்று நான் கருதினேன். நீங்கள் ஈரானின் அதிபர் என்ற முறையில், உங்கள் தேசத்தின் எதிர்காலத்தையும் ஒட்டுமொத்த உலகையும் பாதிக்கக்கூடிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்டவர்.

தற்போது உலகில் பெரும் கிளர்ச்சியும், அமைதியற்ற சூழலும் நிலவுகிறது. சில பகுதிகளில் சிறிய அளவிலான போர்கள் வெடித்துள்ளன, மற்ற இடங்களில் வல்லரசு நாடுகள் அமைதியைக் கொண்டுவருவதாகக் கூறிக் கொண்டு செயல்படுகின்றன. ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுக்கு உதவவோ அல்லது எதிர்க்கவோ ஏதோ ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது, ஆனால் நீதியின் எதிர்பார்ப்புகள் மட்டும் எங்கும் நிறைவேற்றப்படுவதில்லை.

வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், உலகின் தற்போதைய சூழ்நிலைகளை நாம் கவனித்தால், மற்றோர் உலகப் போருக்கான அடிக்கல் ஏற்கனவே நாட்டப்பட்டுவிட்டதைக் காண்கிறோம். சிறியது முதல் பெரியது வரை பல நாடுகள் அணு ஆயுதங்களை வைத்திருப்பதால், பகையும் விரோதமும் அதிகரித்து வருகின்றது. இத்தகைய இக்கட்டான நிலையில், மூன்றாவது உலகப் போர் நம் கண்முன்னே உறுதியாகத் தெரிகிறது. அணு ஆயுதங்கள் கைவசம் இருப்பது நமக்கு இதனை உணர்த்துகின்றது. அதாவது மூன்றாவது உலகப் போர் ஓர் அணு ஆயுதப் போராகவே அமையும்.

* * * * *  * * * * * *

# ஜுமுஆ பேருரை

**மத்திய கிழக்கில் தற்போதைய போர்ச் சூழலின் பின்னணியில் முஸ்லிம் சமுதாயத்திற்கு வழங்கப்பட்ட**

**பொன்னான அறிவுரைகள் மற்றும் துஆவிற்கான வழிகாட்டல்கள்**

**முஸ்லிம் அரசாங்கங்கள், அரசியல்வாதிகள் மற்றும் மன்னர்கள் தங்கள் தனிப்பட்ட நலன்களை மட்டுமே அடைவதற்குப் பகரமாக, நாம் இஸ்லாமிய சமுதாயம் என்ற ரீதியில் ஒன்றுபட வேண்டும்**

**தங்களுக்கு இடையிலான அசல் உறவு இஸ்லாமிய சகோதரத்துவம் ஆகும் என்பதை அரபு நாடுகள் நினைவில் கொள்ள வேண்டும். அற்ப சண்டை சச்சரவுகள் இந்த இஸ்லாமிய சகோதரத்துவத்தை உடைப்பதற்குக் காரணமாக அமைந்துவிடக் கூடாது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 மார்ச் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **அமான்** மாதம் **06 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியின் நோக்கம் ஏக இறைவனை நம்புவது, அவனை வணங்குவது, அவனது ஏகத்துவத்தை நிலைநிறுத்துவது மற்றும் அதற்காக முயற்சி செய்வது மேலும் அவனது அடியார்களின் உரிமைகளை செலுத்துவது ஆகும். அதன் பிறகு, ஒரே உம்மத்தாக ஒன்றிணைந்து, பரஸ்பரம் சகோதரர்களாக வாழ்வதாகும்.**

ஆனால், நாங்கள் அனைவரும் ஒரே கலிமாவை கூறுபவர்களாவோம்; மேலும் நாங்கள் لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ என்பதன் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று நாம் வாதம் செய்தபோதிலும், நமக்குள்ளே பிரிவினைகள் உள்ளன; மேலும் ஒற்றுமை இல்லை. நாம் எந்தப் போதனையைப் பெற்றிருப்பதாக வாதம் செய்கின்றோமோ அதற்கேற்ப நமது செயல்கள் இல்லை. இதன் விளைவாக, இன்றைய முஸ்லிம் உலகின் நிலையை நாம் சிந்தித்துப் பார்த்தால், அது மிகவும் கவலைக்குரியதாக உள்ளது.

சில இஸ்லாமிய நாடுகளிடம் இயற்கை வளங்களும், செல்வமும் இருந்தபோதிலும், உலக சக்திகளுக்கு முன்னால் அவர்களுக்கு எந்த சிறப்பு அந்தஸ்தும் இல்லை. மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காக அவர்களின் எந்த சிறப்பு பங்களிப்பும் இல்லை, அதே போன்று, இஸ்லாமிய போதனைகளின்படி செயல்படுவதில் இருக்க வேண்டிய அந்த முயற்சியும் அவர்களிடம் தென்படவில்லை. இதன் விளைவு முற்றிலும் வெளிப்படையாகும்.

நான் முன்பே பலமுறை கூறியது போல, அந்நிய சக்திகள் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

**எனவே, முஸ்லிம் அரசாங்கங்கள், அரசியல்வாதிகள் மற்றும் மன்னர்கள் தங்கள் தனிப்பட்ட நலன்களை மட்டுமே அடைவதற்குப் பகரமாக, நாம் இஸ்லாமிய சமுதாயம் என்ற ரீதியில் ஒன்றுபட வேண்டும் என்று முயற்சி செய்ய வேண்டும். மேலும், அதற்காக நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு நடக்கும்போதுதான் நாம் உலகத் தாக்குதல்களில் இருந்து தப்பிக்க முடியும். அப்போதுதான் நமது சுயமரியாதையை நிலைநாட்ட முடியும். மேலும் அப்போதுதான் இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகள் நமக்குள்ளேயே பிளவுகளை ஏற்படுத்துவதைத் தடுக்க முடியும். அதற்கு, இந்த காலத்தில் அல்லாஹ் என்ன ஏற்பாடு செய்திருக்கிறான்? என்பதையும் நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். அந்த இறை ஏற்பாடு என்ன? என்பதை நாம் அறிந்து, அதன் அடிப்படையில் செயல்பட்டால் அல்லது அதை ஏற்றுக்கொண்டால் பின்னர் நாம் இந்தப் பிரச்சினைகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள முடியும்; மேலும் 'ஒரே சமுதாயமாக ஆக முடியும்.**

அல்லாஹ் செய்த அந்த ஏற்பாடு என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஒரே சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக அன்னாரை அனுப்பியுள்ளான்.

எனவே, நாம் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நாம் இதைப் பற்றிச் சிந்திக்கும்போதும் மேலும் இஸ்லாமிய உலகின் இந்த முஸ்லிம் நாடுகள் இதைப் பற்றிச் சிந்திக்கும் போதும்தான் தங்களுக்கு எதிராக எழுகின்ற குழப்பங்கள் மற்றும் கலகங்களில் இருந்து அவர்களால் தப்பிக்க முடியும்.

எப்படியிருப்பினும், அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்தை ஒன்றிணைப்பானாக! மேலும் இன்று அவர்கள் அனுபவித்து வரும் குழப்பங்கள் மற்றும் அநீதிகளிலிருந்து அல்லாஹ் அவர்களைக் காப்பானாக!

அஹ்மதியாக இருப்பதன் அடிப்படையில் நம்முடைய முயற்சியும், பிரார்த்தனையும் இதுவேயாகும்.

உலகின் நிலையைப் பற்றி நான் ஒரு நீண்ட காலமாக கூறிக் கொண்டிருக்கிறேன். ஐரோப்பா மற்றும் இதர மேற்கத்திய நாடுகள் மட்டுமே இந்த நிலைமைகளுக்குக் காரணமாகக் கூடும் என்று முன்னர் கருதப்பட்டது. ஆனால், அவர்களோ அதற்கு காரணமாக இருந்து கொண்டிருக்கின்றனர்தான்; எனினும், அதேநேரம் இன்று இஸ்லாமிய நாடுகளும் அதற்கு ஒரு காரணமாக ஆகியுள்ளன. இதற்காக, அந்த மேற்கத்திய சக்திகளே முதலில் இஸ்லாமிய நாடுகளுக்குள் குழப்பங்களை உருவாக்கின, பின்னர் மெல்ல மெல்ல அந்தக் குழப்பத்தைத் தூண்டி விட்டு, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாடு வரை பரப்பிக் கொண்டே சென்று விட்டன.

இதற்குப் பின்னால் இருக்கும் அவர்களின் திட்டங்கள் என்ன? அவர்கள் தங்கள் அதிகாரத்தின் மூலம் இந்த நாடுகளின் வளங்களைக் கைப்பற்றவும், அவற்றை தங்களுடைய பயன்பாட்டின் கீழ் கொண்டு வரவும் விரும்புகின்றனர் என்பது முற்றிலும் வெளிப்படையாகும். சில அரபு நாடுகளிடம் செல்வமும் உள்ளன. நான் முன்பே கூறியது போல, இந்த மேற்கத்திய சக்திகள் அவற்றைத் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.

எப்படியிருந்தாலும், நான் நீண்ட காலமாக மற்றவர்களுக்கு முன்னிலையிலும், நம் மக்களுக்கு முன்னிலையிலும் கூறி வரும் விஷயங்களின் விளைவுகளை இன்று நாம் மிகத் தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

நாம் எப்போதும் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும்: இந்த தஜ்ஜாலிய சக்திகள் முஸ்லிம்களாகிய நாம் அமைதியுடனும், நிம்மதியுடனும் இருப்பதை ஒருபோதும் பார்க்க விரும்புவதில்லை. முஸ்லிம் உலகில் எப்போதும் குழப்பத்தை உருவாக்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதே அவர்களின் உண்மையான அஜென்டா ஆகும். அரபு நாடுகளில் எங்கு எண்ணெய் வளமோ அல்லது மற்ற வளங்களோ இருக்கின்றனவோ அங்கு அமைதியை நிலைநாட்ட நாங்கள் உங்களுடன் ஒப்பந்தம் செய்கிறோம் என்று கூறி இந்தத் தஜ்ஜாலிய சக்திகள் எப்போதும் ஏமாற்றி வருகின்றன. ஆனால் உண்மையில் அவர்களின் உட்புறத் திட்டங்கள் வேறானவையாக இருக்கின்றன. அவை இன்று வெளிப்படையாகத் தெரியத் தொடங்கிவிட்டன.

எனவே இன்று துஆக்களின் மூலம் குறிப்பாக அல்லாஹ்வின் முன்னால் குனிவதும், முஸ்லிம் உலகிற்காக குறிப்பாக துஆ செய்வதும் நமது பணியாகும். இதற்கு இப்போது மிகுந்த தேவை உள்ளது.

இன்று மத்திய கிழக்கில் நடக்கும் இந்தப் போரை நாம் ஆய்வு செய்தால் நாம் பார்க்கின்றோம்; மேலும், அமெரிக்கா பல முஸ்லிம் நாடுகளில் தனது ராணுவத் தளங்களை அமைத்துள்ளது. ஆனால் இது எதற்காக? இதன் காரணம் என்ன? என்று மிகத் தெளிவாக தெரிய வருகிறது. அந்த நாடுகளைப் பாதுகாப்பதற்காகவா? அந்த அரபு நாடுகளுக்கு யாரிடமிருந்து அச்சுறுத்தல் இருந்தது? இந்த தஜ்ஜாலிய சக்திகளே ஆபத்துகளை உருவாக்கின; பிறகு உங்களுக்கு ஆபத்து இருக்கிறது; உங்களைப் பாதுகாக்க இந்தத் தளங்களை அமைப்பது அவசியமாகும் என்ற கருத்தை உருவாக்கினர். முஸ்லிம்களுக்கு யாரிடமிருந்து ஆபத்து இருந்ததோ, அவர்களுக்கு எதிராக ஒருபோதும் தமது சக்தியையோ அல்லது ஆயுதங்களையோ பயன்படுத்த மாட்டார்கள். அடுத்து, எங்களுக்குத் தளங்களை வழங்குங்கள்; நாங்கள் உங்கள் நலன்களையும், வர்த்தகத்தையும் பாதுகாப்போம் என்ற கூற்றை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்தனர். உள்ளபடியே அந்தப் பிராந்தியத்தில், அந்தப் பகுதியில் தங்களுக்கு எதிரான சக்திகளுக்கு எதிரில் வலுவான அடித்தளத்தின் மீது தங்களது இருப்பை நிலைநிறுத்தி வைப்பதே அவர்களின் அசல் நோக்கமாக இருந்தது.அரபு நாடுகளுக்கு ஏதேனும் ஆபத்து இருந்ததென்றால், அது அந்தச் சக்திகளால் சுயமே உருவாக்கப்பட்டதாக இருந்ததே தவிர, அவர்களுக்குள் அப்படி எந்த ஆபத்தான விஷயமும் இருந்திருக்கவில்லை.

எவ்வாறாயினும், பிராந்தியத்தில் தங்களின் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே இந்தத் தளங்களை அவர்கள் அமைத்தனர். இஸ்லாம் அல்லாத உலகிலும் மற்றும் இஸ்லாமிய உலகிலும் தங்களுடைய மேலாதிக்கத்தை நிலைநிறுத்த அவர்கள் விரும்பினர்.

ஈரானோ எப்போதும் இந்த மக்களுக்கு உறுத்திக் கொண்டிருந்தது. மேலும் கொள்கைகள் அளவிலான கருத்து வேறுபாடுகள் காரணமாகச் சில முஸ்லிம் நாடுகளும் ஈரானுக்கு எதிரிகளாக இருந்தன, இதிலிருந்து அந்தச் சக்திகள் பின்னர் பயனடைந்தனர்.

இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் பாலிஸி மிகவும் கடுமையானதாக இருந்தது. எனவே, இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ஈரானை அச்சமடையச் செய்வதற்கு தங்கள் இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் அரபு நாடுகளை எப்படியாவது ஆமோதிக்க வைத்து அங்கே தளங்களை அமைப்பதே உகந்ததாகும் என்று அவர்கள் கருதினர். இந்த விஷயம் முற்றிலும் வெளிப்படையானதாகும். மேலும், நாம் இதன் விளைவை பார்த்தும் விட்டோம். அதாவது, இந்தத் தளங்களின் காரணமாக அரபு நாடுகளின் மீதான தாக்குதலுக்கு சாத்தியக் கூறுகள் இருந்தன, அவை இறுதியில் நிகழ்ந்தன. அவர்களின் பொருளாதாரமும் நாசமாகி விட்டது.

எங்கு எண்ணெய் வளம் உள்ளதோ அல்லது tourism (சுற்றுலா) உள்ளதோ. அங்கு அவற்றின் மீது எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையின் பலனை அந்த சக்திகளே அறுவடை செய்துள்ளன. இனியும் அவ்வாறே நடக்கும். ஏனெனில் போர் நடக்கும்போது பொருளாதாரம் பாதிப்படைகின்றது. அந்நிலையில், எதிர்த் தரப்பும் பதில் தாக்குதல் தொடுக்கும்; மேலும் மற்றவர்களின் தளங்களை அழிக்க முயற்சிக்கும் என்பது வெளிப்படையாகும். அவர்கள் ஈரான் உடன் போர் செய்திருந்தனர். எனவே ஈரானும் இன்று நமக்கு காட்சியளித்துக் கொண்டிருப்பதை செய்தது. அதாவது, அரபு நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்களைக் குறிவைத்தது. மேலும் அவற்றை அழித்தது; அல்லது சேதப்படுத்தியது.

அரபு நாடுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; ஏனெனில் இவை அனைத்தையும் ஈரான் செய்கிறது என்று கூறப்படுகிறது. இதனை ஈரான் செய்யவில்லை; மாறாக அமெரிக்காவும், இஸ்ரேலுமே கூட செய்திருக்க கூடும். ஈரான் முன்னர் செய்திருந்தாலும் கூட, இப்போது அவற்றை பயன்படுத்திக் கொண்டு அவர்கள் செய்வார்கள்; சில தாக்குதல்களை ஈரான் மறுக்கவும் செய்துள்ளது என்று நேற்றுதான் ஓர் அரபு பத்திரிகையாளர் எழுதினார். அவர் எந்த அளவிற்கு எழுதியுள்ளார் என்றால், ஒரு கட்டத்தில் அமெரிக்காவும், இஸ்ரேலும் இந்தப் போரிலிருந்து வெளியேறிவிடுவதும், மேலும் அவர்கள் விரும்பியபடி முஸ்லிம் உலகம் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டே இருப்பதும் சாத்தியமாகும்.

இனி இந்த குழப்பம் உலகில் பரவிக் கொண்டே சென்று விடும் என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஈராக் போரின் போது எச்சரிக்கை செய்திருந்தார்கள் .(வளைகுடா நெருக்கடி, பக்கம் 29, 76)

அந்தோ! முஸ்லிம் உலகம் இந்த உண்மையை புரிய வேண்டுமே !

இப்போது ஆய்வு செய்துப் பாருங்கள்! ஈராக் போருடன் சேர்ந்து மற்ற முஸ்லிம் நாடுகளிலும் அமைதியின்மையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கு குழப்பங்கள் விளைவிக்கப்பட்டன, அதன் பிறகு மற்ற முஸ்லிம் நாடுகளிலும் தொடர்ந்து அமைதியின்மை ஏற்பட்டு வருவதை யாராலும் மறுக்க முடியாது. முஸ்லிம் உலகில் சில முஸ்லிம் நாடுகளே தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்வதையும் நாம் காண்கிறோம். நான் கூறியது போல, இந்த அமைதியின்மை இதே மேற்கத்திய சக்திகளால் பரப்பப்பட்டது. மேலும் இறைவனின் ஏதேனும் சிறப்பு இறைநியதி இருந்தாலே தவிர, இது முடிவுக்கு வருவதற்கான எந்த அறிகுறியும் வெளிப்படையில் தென்படவில்லை. எப்படியிருப்பினும், இதற்காக அவர்கள் முயற்சி செய்ய நேரிடும்.

எப்படியிருப்பினும், அல்லாஹ் முஸ்லிம் உலகை இந்த அமைதியின்மை மற்றும் குழப்பங்களில் இருந்து பாதுகாத்து, காப்பாற்ற வேண்டும் என்று நாம் துஆ செய்ய வேண்டும். மேலும், முஸ்லிம் உலகமும், முஸ்லிம்களும் அமைதி நிறைந்தவர்களாகவும், தங்களுக்குள் சகோதரர்களாக திகழவும் வேண்டும். இதுவே அவர்களுக்கான இஸ்லாமிய போதனையே தவிர, அவர்கள் ஒருவர் மற்றவரின் கழுத்துகளை வெட்டிக் கொள்பவர்களாக இருக்க வேண்டும் என்பதன்று.

எனவே நம்முடைய பணியும் இதுவே ஆகும். அதாவது, நம்மவர்கள் மற்றும் அந்நியர்கள் இருவருக்கும் அநீதியிலிருந்து

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

விலகுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த நாம் ஒரு நீண்ட காலமாக முயற்சி செய்து வருகிறோம். அநீதி இப்போது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதிலிருந்து இது ஒரு பெரிய அளவிலான உலகப் போருக்கு வழிவகுக்கும் என்று தோன்றுகிறது. இன்னும் கூறப்போனால், சில மேற்கத்திய விமர்சகர்களின் கூற்றுப்படி, உலகப் போர் தொடங்கிவிட்டது. நானும் இதையேதான் கூறுகிறேன், போர் தொடங்கிவிட்டது. ஆனால், முஸ்லிம் உலகம் இப்போதும் புத்திசாலித்தனமாகச் செயல்பட்டு, விழிப்புணர்வு பெற்று, ஒன்றுபட்டால், அவர்கள் இப்போதும் கூட தஜ்ஜாலிய குழப்பங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும்.

உலகை ஆய்வு செய்துப் பார்த்தால், இப்போது ஆபத்து மிகவும் அதிகமாக உள்ளது. நான் ஏற்கனவே கூறியது போல ஒவ்வொருவருக்கும் அவரவருடைய சுயநலன்கள் உள்ளன, மேலும் சுயநலம் உச்சக்கட்டத்தை அடைந்து விடும்போது மனிதன் எதைப் பற்றியும் சிந்திப்பதில்லை; அவன் தன்னைப் பற்றி மட்டுமே சிந்திப்பான்.

எனவே, உலகில் குழப்பத்தைக் குறைக்க வேண்டும் என்றால், அது தனது உரிமையை எடுத்துக் கொள்வதால் மட்டும் குறைந்துவிடாது; மாறாக (பிறருக்கான) உரிமையை கொடுக்கவும் வேண்டியிருக்கும் என்பதை நாம் பார்க்க வேண்டும். உலக முஸ்லிம்கள் இந்த விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் மேற்கத்திய நாடுகளிலும், வல்லரசு நாடுகளிலும் உள்ள தங்கள் ஆதரவாளர்களிடம் அமைதியை நிலைநாட்ட நீங்களும் சில உரிமைகளை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும் என்று கூற வேண்டும். அவர்கள் தங்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுப்பது என்பதல்ல ; அவர்களோ மற்றவர்களின் உரிமைகளை அபகரித்துக் கொண்டிருக்கின்றார்கள். நீங்களும் நீதியுடன் நடக்க வேண்டும்; அப்போதுதான் நம்மால் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று கூற நேரிடும்.

இதற்காக நான் ஒரு நீண்ட காலமாக மக்களுக்கு கவனமூட்டி வருகிறேன். எவர்கள் ஒரு காலத்தில் எனது பேச்சைக் கேட்டுவிட்டு, 'நீங்கள் உலகைப் பற்றி மிகவும் நிராசையுடன் பேசுகின்றீர்கள்; மேலும், உலகம் ஒரு பயங்கரமான போரில் சிக்கிக்கொள்ளும் என்று நீங்கள் எதிர்மறையான சிந்தனை கொண்டுள்ளீர்கள்' என்று கூறி வந்தார்களோ, அதே மக்கள் இன்று தாங்களாகவே, 'சில ஆண்டுகளுக்கு முன்பு எதை நாங்கள் சாத்தியமற்றது என்று நினைத்தோமோ, அது இப்போது சாத்தியமாகிவிட்டது; போர்கள் தொடங்கிவிட்டன' என்று கூறத் தொடங்கிவிட்டனர்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அமர்ந்துள்ள இவர்களின் விமர்சகர்கள் உள்ளனர்; நான் முன்பே கூறியது போன்று, தற்போது உலகப் போர் தொடங்கிவிட்டது என்று அவர்கள் எழுதத் தொடங்கி விட்டனர்.

இது மேலும் அதிகரித்துக் கொண்டே சென்று விடும்; இந்த மக்கள் தங்களுடைய தவறான நலன்களைப் பெறுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கும் வரை இந்த ஆபத்து குறைவது சாத்தியமில்லை. போர் நடக்கும்போது இரு தரப்பிலும் இழப்புகள் ஏற்படுகின்றன. தற்போது மத்திய கிழக்கில் போர் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. சொல்லப்போனால், அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல் நடத்தி இந்தப் போரைத் தொடங்கியுள்ளது. ஆனால், ஈரான் தெளிவாக முன்பே எச்சரிக்கை விடுத்திருந்தது; அதாவது எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அரபு நாடுகளில் அமெரிக்கத் தளங்கள் இருக்கின்றன.

அவர்கள் அவற்றை ஒரு குறிப்பான நோக்கத்திற்காக உருவாக்கியிருந்தனர். இப்போது அந்த நோக்கத்தை அடைந்தும் வருகின்றனர்.

ஆக, அவற்றின் மீது நாங்கள் தாக்குதல் நடத்துவோம் என்று ஈரான் மிக தெளிவாக கூறியிருந்தது. பின்னர், போர் தொடங்கியபோது ஈரான் மீது குண்டுகள் வீசப்பட்டன. அவர்களின் நகரங்கள் அழிக்கப்பட்டன. அப்பாவி மக்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆன்மீகத் தலைவரின் குடியிருப்பு மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அவர்களின் குடும்ப உறுப்பினர்களில் பெரும்பாலோரின் வாழ்க்கை தீர்த்துக்கட்டப்பட்டது. அந்த சக்திகள் நினைத்தன ; மேலும், நாங்கள் இந்த ஆட்சியை (regime) முடிவுக்குக் கொண்டுவந்தால் பின்னர் ஈரானியர்களுக்கு சுதந்திரம் கிடைத்துவிடும் என்று அவர்கள் முழங்கிக் கொண்டிருந்தனர். ஆனால், அதனால் என்ன விளைவு ஏற்பட்டது? எதிர்த்துக் கொண்டிருந்த சில நபர்களும் இப்போது அவருக்கு ஆதரவாக மாறிவிட்டனர். மேலும் இந்தத் தலைவருக்கு, அவரது பெயர் கமேனி ஸாஹிப் ஆகும். அவருக்கு ஷஹாதத் எனும் அந்தஸ்து கிடைத்துவிட்டது. அந்தத் தியாகத்தின் காரணமாக நாட்டு மக்களிடையே அவருடைய கௌரவமும், மரியாதையும் மேலும் அதிகரித்துவிட்டது.

அவருடைய குழந்தைகளும் கொல்லப்பட்டனர், முழு குடும்பமும் கொல்லப்பட்டது. ஆக, இந்த அநீதி நிகழ்ந்துள்ளது. இதனால் ஆட்சி மாற்றம் எப்படி ஏற்படும்? இதனால் அவருடைய கௌரவமும், மரியாதையும் இன்னும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

எப்படியிருப்பினும், ஈரானும் இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அரபு நாடுகளிலுள்ள மேற்கத்திய சக்திகள் மற்றும் அமெரிக்காவின் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. அதுமட்டுமின்றி, சில எண்ணெய் கிணறுகள் போன்ற இடங்களிலும் தாக்குதல் நடத்தியது.

ஈரான் சவூதி அரேபியாவின் இன்ன எண்ணெய் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தினால் நாங்களும் இப்படி செய்வோம் என்று அமெரிக்கா மிரட்டத் தொடங்கி விட்டது. தாக்குதல் நடத்தி விட்டனர்; எனவே நாங்கள் இப்படி செய்து விடுவோம்; அப்படி செய்து விடுவோம் என்றும் சில இடங்களில் அவர்கள் கூறவும் செய்தனர்.

இதற்கு, நாங்கள் அத்தகைய இடங்களில் எவ்விதத் தாக்குதலும் நடத்தவில்லை; அவ்வாறு செய்யும் எண்ணமும் எங்களுக்கு இல்லை என்று ஈரான் தெளிவாக கூறியது. இது முஸ்லிம்களின் இதயங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பை உருவாக்குவதற்கான மற்றொரு சூழ்ச்சியாகும். ஏற்கனவே போர் நடந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே ஒரு பத்திரிகையாளரின் கூற்றை நான் எடுத்துரைத்தது போன்று, இவ்வாறு கூறுவது அந்த வெறுப்பை இன்னும் ஊதி பெரிதாக்குவதற்கான முயற்சி மட்டுமே ஆகும்.

அவர்களாகவே தங்களுக்குச் சேதத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதன் பழியை அவர்கள் ஈரான் மீது சுமத்தக் கூடும் என்றும் அவர் கூறியிருந்தார்.

நான் கூறியது போன்று, இத்தகையச் சூழலில் முஸ்லிம் உலகம் மிகவும் சிந்தித்துச் செயல்பட வேண்டும். அஹ்மதிகளாகிய நாம் அனுதாபம் கொண்டிருந்தபோதிலும், அவர்களை எச்சரிக்கை செய்வதை தவிர்த்து வேறு எதுவும் செய்ய முடியாத நிர்பந்தத்தில் இருக்கின்றோம். அவர்களுக்காக துஆ செய்யுங்கள்; நடப்பவை அனைத்தும் தவறானவை என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க முயற்சி செய்யுங்கள். முஸ்லிம் அரசாங்கங்கள் இப்போதாவது விழித்துக்கொண்டு, தங்களது சுயநலத்திற்காக மட்டுமின்றி ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்தின் நலனை முன்னிறுத்த வேண்டும்; எந்தவித துரோகத்திற்கும் இடம் கொடுக்கக் கூடாது. ஆக, தற்போதும் கூட ஓரளவு

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மத்திய கிழக்கிலுள்ள சில அரபு நாடுகளில் சிலரிடம் எண்ணெய் வளம் இருக்கலாம். எனினும், அவர்களிடம் பாதுகாப்புத் திறனும் இல்லை; அவர்களின் தொழிற்துறையும் முன்னேறவில்லை. வெறும் எண்ணெய் வளம் அல்லது சில இடங்களில் சுற்றுலாவை (tourism) மேம்படுத்துவதன் மூலம் மற்றும் அதை develop செய்வதன் மூலம் மட்டும் முன்னேற்றம் அடைந்துவிட முடியாது. அவர்களின் முழுமையான சார்பு என்பது மேற்கு உலகம் மற்றும் மேற்கத்திய சக்திகளின் மீதுதான் உள்ளது. நான் கூறியது போல, அவர்களின் இதே பலவீனத்தைப் பயன்படுத்தி மேற்குலக சக்திகள் அங்குத் தங்களின் தளங்களை அமைத்துள்ளன. பிறகு, ஈரானுக்கு எதிரான போர் தொடங்கியபோது, ஈரானும் அரபு நாடுகளின் மீதான தாக்குதலை தொடங்கி விட்டது. அரபு நாடுகள் மீது தாக்குதல் நடத்தவில்லை; மாறாக, அமெரிக்கத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. ஆனால், உங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்ற தாக்கம் அரேபியர்கள் மீது ஏற்படுத்தப்படுகிறது.

தற்போது இந்தப் போர் ஒரு பயங்கரமான நிலையை எட்டிவிட்டது என்று தெளிவாகத் தெரிகிறது. ஈரானின் தரப்பிலிருந்து ஏவுகணைகள் வீசப்படுகின்றன, அவற்றை intercept (வழிமறிப்பு) செய்வதற்கு அமெரிக்கர்கள் தங்களுடைய ஒரு பாதுகாப்பு அமைப்பை உருவாக்கியுள்ளனர். ஆனால், பகுப்பாய்வாளர்கள் இப்போது இவ்வாறு எழுதுகின்றனர்:

அதாவது, ஈரான் ஐம்பதாயிரம் டாலர் மதிப்பிலான ஓர் ஏவுகணையை வீசினால், அதை அழிப்பதற்கு ஆகக் கூடிய செலவு, அதனை தடுக்கின்ற அந்த ஏவுகணைக்கான செலவு என்பது பல மில்லியன் டாலர்கள் ஆகும். பொருளாதார ரீதியாக இதன் பாதிப்பு அமெரிக்காவிற்கு ஏற்படுகிறது என்று சில பகுப்பாய்வாளர்கள் எழுதுகிறார்கள். ஆனால், இது வெறும் ஓர் எண்ணம் மட்டுமே ஆகும். இந்தச் சக்திகள் ஏற்கனவே ஒவ்வொரு விஷயத்தையும் கணக்கிட்டு வைத்துள்ளன. மேலும் முழுமையாக ஆய்வு செய்கின்ற ; அவர்கள் இவை அனைத்தையும் தீர்மானித்திருக்கின்றனர். இந்தச் சக்திகள் ஒருபோதும் இந்த இழப்பைத் தாங்களே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது எனது எண்ணம் ஆகும். மாறாக, நாங்கள் உங்களைப் பாதுகாக்கிறோம்' என்று கூறி அந்த அரபு நாடுகளிடமிருந்தே இந்தப் பணத்தை வசூல் செய்து கொண்டிருப்பர். ஒருபுறம் அவர்களின் எண்ணெய் கிணறுகள் மூடப்பட்டு வருகின்றன; விலைவாசி அதிகரித்து வருகிறது; மேலும் எண்ணெய் உற்பத்தி குறைந்து வருகிறது. மறுபுறம் அவர்கள் இந்த இழப்பையும் ஈடுகட்ட வேண்டியிருக்கும். இதனால் அவர்களின் கையிருப்பு (reserves) மிகவும் குறைந்துவிடும் அல்லது தீர்ந்துவிடும். இறுதியில் அரபு உலகின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய இழப்பு ஏற்படும். மேற்குலகம் அல்லது வல்லரசுகளுக்கும் இழப்பு ஏற்படும் என்றாலும், எல்லாரையும் விட அதிக இழப்பு அரபு நாடுகளுக்கே ஏற்படும். அவர்கள் இப்போதாவது இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அமெரிக்காவின் தற்போதைய அதிபர் தனது பழைய அரசாங்கங்களின் கொள்கைகளுக்குத்தான் செயல் வடிவம் கொடுத்து வருகிறார் என்பதை இப்போது நாம் காண்கிறோம். இது வெறும் இன்றைய அரசாங்கத்தின் கொள்கை மட்டுமல்ல, மாறாக, எங்கு மனம் விரும்புமோ அங்கிருக்கும் வளங்களை அபகரித்துக் கொள்ளுங்கள்; பிறகு, ஏதாவது ஒரு சாக்குப்போக்கைக் கூறி அதற்கு நியாயம் கற்பிக்க முயற்சி செய்யுங்கள். என்ன காரணம் கூறப்பட்டது என்பது முக்கியமல்ல. இதுவே எப்போதும் அவர்களின் பாலிஸியாக இருந்துள்ளது. இப்போது அமெரிக்காவின் துணை அதிபர் எந்த அளவிற்கு கூறிவிட்டார் என்றால், இன்ன நாடு எங்களுடன் சேரவில்லை என்றால், நாங்கள் அவர்களின் வளங்களைப் பலவந்தமாகக் கைப்பற்றுவோம்; மேலும் அவர்களை எங்களுடன் இணைத்துக் கொள்வோம். போரில் எந்த நாடுகள் இணையாதோ அவர்கள் மீது தடைகள் விதிக்கப்படும்; sanctions விதிக்கப்படும்.'

கடந்த சில நாட்களுக்கு முன்பு, ஸ்பெயின் பிரதமர் துணிச்சலை வெளிப்படுத்தினார்; மேலும், நாங்கள் இந்தப் போரில் பங்கெடுக்கவும் மாட்டோம்; எங்களது தளங்களையும் தரவும் மாட்டோம் என்று கூறினார்.. எனவே, உங்களுடனான வர்த்தக உறவுகளை அமெரிக்கா துண்டித்து விடும்' என்று மிரட்டல் விடுக்கப்பட்டது. இவ்வாறு மிரட்டி, தவறான வழிகளில் பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்து, நாடுகளையும், மக்களையும் தங்களோடு சேருமாறு கட்டாயப்படுத்துகிறார்கள்.

இத்தகையச் சூழலில் நீதியோ எங்கும் எஞ்சியிருக்கவில்லை; நீதி மறைந்துவிடும்போது அழிவு வருகிறது. தற்போது வெளிப்பட்டு வரும் அபாயகரமான விளைவுகள் ஏற்படுகின்றன ; இன்னும் கூறப்போனால், தற்போது ஏற்பட்டுள்ள விளைவுகளை விடவும் மிகவும் மோசமான மற்றும் பயங்கரமான விளைவுகள் உருவாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு, ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஸ்பெயினைச் சேர்ந்த ஒரு பெண் உறுப்பினர் மிகத் தெளிவாக அங்கு ஓர் அறிக்கையை வெளியிட்டார். அமெரிக்காவின் எந்தவொரு போரினாலும் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை என்று அவர் கூறினார். அவர் பெண்ணாக இருந்தார். எனவே பெண் உரிமையைப் பற்றிப் பேசினார். அவர் கூறினார்: நாங்கள் ஈரானியப் பெண்களின் சுதந்திரத்திற்காகப் போராடுகிறோம் என்ற அமெரிக்கர்களின் வாதம் முற்றிலும் பொய் ஆகும்; இதனால் ஈரானியப் பெண்களுக்கு ஒருபோதும் விடுதலை கிடைக்காது. அமெரிக்கா எந்தப் பெண்ணின் சுதந்திரத்திற்காகவும் போர் புரிந்ததில்லை; அதன் மூலம் அவர்களுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதில் வெற்றி பெற்றதும் இல்லை.




எப்படியிருப்பினும், சுருக்கம் இதுவாகும்; அதாவது, இந்த நாடுகளில் அமெரிக்காவின் ஏகாதிபத்தியம் ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இருந்தது. ஆனால், இப்போது இஸ்ரேலையும் இதில் பகிரங்கமாகச் சேர்த்துக் கொண்டு அந்த ஏகாதிபத்தியம் மேலும் மிகவும் பலப்படுத்தப்படுகிறது.

இந்தக் கட்டாயப்படுத்துதல், மிரட்டல், தவறான வழிமுறைகள் மற்றும் தஜ்ஜாலிய சதித் சதித்திட்டங்கள் மூலம் நாம் எப்படிப்பட்ட ஓர் இடத்தில் சிக்க வைக்கப்படுகிறோம் என்றால் அங்கு நாம் நமது சொந்த முஸ்லிம் நாடுகளுடன் போரிடுகிறோம் என்ற விஷயத்தை அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் புரிவதில்லை. முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்கு எதிராகவே போரிடும்படி செய்யப்படுகின்றனர்.

எப்படியிருப்பினும், இப்போது ரஷ்யாவும், சீனாவும் தங்களது ஒரு கூட்டணியை உருவாக்கி வருகின்றன, மேலும் தற்போது உருவாகி வரும் இந்த Block எதிர்காலத்திலும் தொடரும்; அல்லது வரும் காலங்களில் இது விரிவுடையும்; மேலும் இது இன்னும் வலுவடைந்து கொண்டே சென்று விடும் என்பது வெளிப்படையாகும். இஸ்லாமிய உலகம் போர்க்களமாக இருக்கும். ஏனெனில் அவர்கள் அபகரிக்க விரும்பும் வளங்கள் இவர்களிடம்தான் உள்ளன. முஸ்லிம்கள் இதைப் புரிந்து கொண்டு நிதானமாகச் செயல்பட வேண்டும்.

இப்போது இவர்கள் அதாவது அமெரிக்காவும், அதன் கூட்டாளியும் கூறுகின்றனர்:

நாங்கள் ஈரான் மீது ஏன் தாக்குதல் நடத்தினோம் என்றால், அவர்களுக்கு இப்படி ஓர்

எண்ணம் இருந்தது; அவர்கள் அப்படி செய்திருந்தால் இவ்வாறு ஆகியிருக்கும்; அவர்கள் அணு குண்டு தயாரித்திருப்பார்கள் அல்லது இப்படி ஆகியிருக்கும்; அதாவது, இப்படி நடந்திருந்தால் அப்படி இப்படி ஆகியிருக்கும் என்று வெறும் ஒரு கற்பனையை உருவாக்கி போரைத் தொடங்கி விட்டனர். இதுவே முற்றிலும் பலவந்தமான விஷயமாகும்.

,ஈரானை அழிப்பதோ அல்லது அதனுடன் போரிடுவதோ அவர்கள் நினைத்தது போல அவ்வளவு எளிதானது அல்ல என்று இப்போது அவர்களின் மேற்கத்திய ஆய்வாளர்களே கூறத் தொடங்கிவிட்டனர். ஈரான் ஒரு பெரிய மற்றும் பரந்து விரிந்த நாடாகும். அவர்களுக்கும் சில வலிமை உள்ளது, மேலும் இந்தப் போர் நீண்ட காலம் நீடிக்கக்கூடும். இதன் விளைவாக ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமும் பாதிக்கப்படும், ஆனால் முஸ்லிம் உலகில் இதன் தாக்கம் மிக அதிகமாக இருக்கும்.

ஆனால், அடுத்து எல்லாவற்றையும் விட மிகவும் வருத்தமான விஷயம் என்னவென்றால், இதில் முஸ்லிம்களே முஸ்லிம்களின் ரத்தத்தை சிந்தச் செய்கின்றனர். எவ்வாறிருப்பினும், முஸ்லிம்கள் அல்லாஹ்வின் தண்டனைக்கு அஞ்ச வேண்டும். நூற்றுக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். மேற்கத்திய நாடுகளைக் கவனித்தால், அங்குள்ள கட்டுரையாளர்கள் இஸ்ரேல் அல்லது அமெரிக்கா அல்லது ஏதேனும் மேற்கத்திய நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, அங்கு ஒரு சில குழந்தைகள் கொல்லப்பட்டால் கூட, செய்தித்தாள்களில் பல நாட்களுக்குத் தொடர்ந்து கட்டுரைகள் எழுதுகின்றனர். ஆனால் இங்கே ஒரு பள்ளிக்கூடத்தின் மீது குண்டுவீசி நூற்றுக்கணக்கான குழந்தைகளைக் கொன்றால் கூட, அங்கு யாரும் எதுவும் சொல்வதில்லை. முதலில் பாலஸ்தீனத்தில் இதே நிலையை உருவாக்கினார்கள். இப்போது ஈரானிலும் இதுதான் நடக்கிறது. அவர்களின் பார்வையில் முஸ்லிம்களின் உயிருக்கு எவ்வித மதிப்பும் இல்லை என்பது போலத் தோன்றுகிறது.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ் முஸ்லிம்கள் அறிவுடன் செயல்படும் பொருட்டு அவர்களுக்கு அறிவை வழங்கட்டும்! அவர்கள் பரஸ்பரம் ஒன்றிணைந்து அமர்ந்து பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்யட்டும்! அவர்கள் ஏகத்துவத்திற்கான வாதம் செய்யக் கூடியவர்கள் ஆவர். அவ்வாறிருக்க, ஏகத்துவத்தை நிலைநாட்ட அவர்கள் ஒன்றாக வேண்டும்.

வீணாகப் பழி சுமத்தி சண்டைகளை உருவாக்க வேண்டிய எந்த அவசியமுமில்லை. இன்னாருடைய கொள்கையினால் சண்டைகள் வளர்கின்றன என்று சொல்வதும் பொதுவான ஒன்றாகிவிட்டது. இதனால்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் எச்சரிக்கையாகவும், பரிவுடன் நடப்பவர்களாகவும் இருந்தார்கள். சிலமுறை ஸஹாபிகள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஒருவரைப் பற்றி 'இன்ன நபர் ஒரு நயவஞ்சகர் ஆவார் என்று கூறினர். அதற்கு, 'அவர் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று கூறும் வரை என்னால் அவரை ஒன்றும் சொல்ல முடியாது; நீங்களும் அவரை முனாஃபிக் என்று சொல்லாதீர்கள்' என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி, கிதாப் அஸ்-ஸலாத், பாப் அல்-மசாஜித், ஹதீஸ்: 425)

எனவே, அற்ப விஷயங்களுக்காகச் சண்டையிடுவது என்பது உண்மையில் உங்களுக்கு நீங்களே பாதிப்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய விஷயமாகும். அல்லாஹ் முஸ்லிம் உலகிற்கு இதற்கும் அறிவைத் தரட்டும்! வெறும் கொள்கை வேறுபாடுகளின் காரணமாக அவர்கள் ஈரானுக்கு எதிராக மாறாமல் இருக்கட்டுமாக!

இஸ்லாம் ஏகத்துவத்தை நிலைநாட்டவே வந்துள்ளது. எனவே அதற்காக முயற்சி செய்ய வேண்டும். வல்லரசுகளை தங்களுடைய கடவுளாகக் கருத வேண்டாம்; ஏனென்றால் எப்போதும் இருக்கக் கூடிய ஆற்றல் அல்லாஹ்விடம் மட்டுமே உள்ளது. ஒருவேளை இந்த வல்லரசுகளே அனைத்துமாகக் கருதிக் கொண்டால், பின்னர் இந்த மக்கள் ஒவ்வொருவராக முடித்து விட்டு பின்னர் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகையும் ஆக்கிரமித்து விடுவார்கள், இந்த வெளிப்படையான அரசாங்கங்கள் இருக்கின்றனவே அவையும் அழிந்துவிடும். எனவே, இப்போதும் காலம் இருக்கிறது, விழிப்புணர்வு பெறுவது அவசியமாகும். வல்ல இறைவனின் பக்கம் குனியுங்கள்.

இந்த உலகவாதிகளோ உலகின் அமைதியையும், நிம்மதியையும், குறிப்பாக முஸ்லிம் உலகின் அமைதியையும், நிம்மதியையும் சீர்குலைத்துவிட்டார்கள், வருங்காலத்திலும் அவ்வாறே செய்வார்கள்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வழிகாட்டியவாறு இவ்வாறு கூறுகிறான்:

وَإِنْ طَائِفَتَانِ مِنَ الْمُؤْمِنِينَ اقْتَتَلُوا
فَأَصْلِحُوا بَيْنَهُمَا ۖ فَإِنْ بَغَتْ إِحْدَاهُمَا
عَلَى الْأُخْرَىٰ فَقَاتِلُوا الَّتِي
تَبْغِي حَتَّىٰ تَفِيءَ إِلَىٰ أَمْرِ اللَّهِ ۚ
فَإِنْ فَاءَتْ فَأَصْلِحُوا بَيْنَهُمَا
بِالْعَدْلِ وَأَقْسِطُوا ۖ
إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُقْسِطِينَ

நம்பிக்கையாளர்களில் இரு பிரிவினர் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால், அவ்விருவருக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள்.(அல்ஹுஜ்ராத்: 10)

அதாவது, நம்பிக்கையாளர்களுடைய இரு குழுக்கள் தங்களுக்குள் மோதிக்கொண்டால், அவ்விருக்கும் இடையே சமாதானம் செய்து வையுங்கள். அடுத்து, சமாதானம் ஏற்பட்டு விட்ட பிறகு அவர்களில் ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் நடத்தினால், அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பும் வரை அந்த அத்துமீறும் அந்தக் கூட்டத்துடன் போரிடுங்கள். பின்னர் அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பிவிட்டால், பின்னர் சண்டையிடக் கூடிய அவ்விருவருக்கும் இடையே நீதியுடன் சமாதானம் செய்து வையுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துபவர்களை நேசிக்கிறான்.

எனவே இது,எத்தகைய வரைபடம் மற்றும் கருத்து என்றால், அது உலக அமைதிக்கும் மிகவும் அவசியமானதாகும். ஆனால் முஸ்லிம் உலகமோ குறிப்பாக இதன்படி செயல்பட வேண்டும். ஏனெனில் அல்லாஹ் திருக்குர்ஆனில் அவர்களுக்காக இந்த தெளிவான வழிகாட்டுதலை வழங்கியுள்ளான்.

எனவே,நீதி மற்றும் நேர்மையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுங்கள். இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பும் இதில் தனது பங்கை ஆற்ற வேண்டும். சமாதானம் செய்து வைக்கும் போது தனிப்பட்ட நலன்களை கருத்தில் கொள்ளக் கூடாது; மாறாக, உண்மையான பிரச்சனைக்கு தீர்ப்பளிக்க வேண்டும். அந்த பிரச்சனைக்கு என்ன காரணங்கள் இருக்கின்றன? என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். காரணங்களோ நமக்குத் தெளிவாகத் தென்படுகின்றன. 'தஜ்ஜாலிய சக்திகள் நாம் பரஸ்பரம் போரிட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகின்றன. ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புகளும் எந்த ஓர் ஆக்கபூர்வமான பங்கையும் செலுத்தவில்லை. இன்னும் கூறப்போனால், இப்போது மக்களே அதற்கு எதிராகப் பேசத் தொடங்கிவிட்டனர். எனவே, நாம் தனிப்பட்ட நலன்களுக்கு அப்பாற்பட்டும், தமது நாட்டு நலன்களுக்கு அப்பாற்பட்டும் இந்தச் செயலைச் செய்தால் மட்டுமே நாம் தப்பிக்க முடியும். இல்லையெனில் நாம் அந்தத் தஜ்ஜாலிய சக்திகளின் மடியில் விழுந்துவிடுவோம். எனவே அனைத்து முஸ்லிம் நாடுகளும் ஒன்றிணைந்து அமர்வது அவசியமாகும்.இதேபோன்று, இந்த வசனத்திற்கு அடுத்து அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّمَا الْمُؤْمِنُونَ إِخْوَةٌ فَأَصْلِحُوا
بَيْنَ أَخَوَيْكُمْ ۚ وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ

நிச்சயமாக

நம்பிக்கையாளர்கள் அனைவரும் பரஸ்பரம் சகோதரர்களே; எனவே, சண்டையிடும் உங்கள் இரு சகோதரர்களுக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள்; உங்கள் மீது கருணை செய்யப்படும் பொருட்டு அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.' (அல்ஹுஜ்ராத்: 10)

முஸ்லிம்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விட்டாலும் கூட ஈரான் மற்றும் சில அரபு நாடுகளுக்கு இடையே இருப்பதாகக் கூறப்படுவது போல அல்லது மற்ற முஸ்லிம் நாடுகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்ற போதிலும், தங்களுக்கு இடையிலான அசல் உறவு இஸ்லாமிய சகோதரத்துவம் ஆகும் என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அற்ப சண்டை சச்சரவுகள் இந்த இஸ்லாமிய சகோதரத்துவத்தை உடைப்பதற்குக் காரணமாக அமைந்துவிடக் கூடாது. முஸ்லிம் நாடுகள் இந்த விஷயத்தில் தனி கவனம் செலுத்த வேண்டும், இல்லையெனில் நான் கூறியது போல், இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளும்!

எனவே அரபு நாடுகளும், ஈரான் அரசாங்கமும் சமரசத்திற்கான வழியைக் காண வேண்டும். சீனா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட பிற நாடுகளும் சமரசத்திற்காகத் தங்களின் பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளன. அந்தோ! முஸ்லிம் உலகம் இதை புரிந்துகொள்ள வேண்டுமே! அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்கட்டுமாக!

எப்படியிருப்பினும், நமது பணி குறிப்பாக முஸ்லிம் உலகத்திற்காகவும், அப்பாவி மக்களுக்காகவும் துஆ செய்வதாகும். குறிப்பாக, ரமலான் மாதத்தில் உங்களுடைய தனிப்பட்ட துஆக்களில் மட்டும் கவனம் செலுத்தாமல், ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். உலகில், குறிப்பாக முஸ்லிம் உலகில் அமைதி நிலை பெறும் பொருட்டு அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக! ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் கழுத்தை வெட்டுபவராக இருக்கக் கூடாது. தவறான வழியில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு ஒருவர் மற்றவரை கொலை செய்யக் கூடிய இந்த மக்கள், இச்செயலால் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகின்றார்கள். இத்தகைய மக்கள் இந்த உலகில் நஷ்டத்தை அடைவது மட்டுமல்லாமல், மறுமையிலும் நஷ்டத்தைச் சந்திப்பார்கள். எனவே இந்த விஷயத்தின் பக்கம் நாம் சிறப்புக் கவனம் செலுத்துவது அவசியமாகும். மேலும், இதற்காக நாம் குறிப்பாக துஆ செய்வதும் அவசியமாகும். அல்லாஹ் நமக்கு உண்மையான முறையில் துஆ செய்யும் நற்பேறை வழங்குவானாக!

இன்று நான் சில ஜனாஸா காயிப் தொழுகைகளையும் நடத்துவேன்.

சில மர்ஹூம்களைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன். முதலாவதாக, மரியாதைக்குரிய ஸாஹிப்ஸாதி அமத்துல் ஜமீல் ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இளைய மகளாக இருந்தார்கள். மேலும் மர்ஹூம் நாஸிர் முஹம்மது சியால் ஸாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். இங்கு முபல்லிஃக் ஆகவும் இருந்த சவ்த்ரி ஃபத்ஹே முஹம்மது ஸியால் ஸாஹிப் அவர்களின் மருமகளும் ஆவார்கள். சுமார் 89 வயதில் கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

انا للہ وانا الیہ راجعون

மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னார் உம்மே தாஹிர் ஹஸ்ரத் ஸய்யிதா மர்யம் பேகம் ஸாஹிபா அவர்களின் இளைய மகளும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பிள்ளைகளில் மிகவும் இளையவரும் ஆவார்கள். அவர்களின் நிக்காஹ்வை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1955-ஆம் ஆண்டு நடத்தினார்கள். அப்போது ஹஸ்ரத் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்ததால், படுக்கையில் படுத்துக் கொண்டே நிக்காஹ் குத்பாவை ஓதி, துஆ செய்து வைத்தார்கள். இந்த நிகழ்வில் சில குடும்பத்தின் மக்கள் இடையில் கலந்து கொண்டிருந்தனர்.

இருப்பினும், இந்த நிகழ்வின் போது தொடக்கம் முதல் முடிவு வரை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மீது ஒருவிதமான சிறப்பான ஆன்மீக நிலை ஏற்பட்டிருந்தது. பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களே 1956-ம் ஆண்டு அன்னாரின் திருமணத்தை நடத்தினார்கள். மேலும், துஆவுடன் அன்னாரை அனுப்பி வைத்தார்கள் என்று எழுதக் கூடியவர் எழுதியுள்ளார்.

அவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். ஒரு மகன் தாஹிர் முஸ்தஃபா ஆவார்கள். அவர் அன்னாரின் மூத்த மகன் ஆவார்கள். அவரை அவர்கள் தமது சகோதரி ஸாஹிப்ஸாதி அமத்துல் கையூம் ஸாஹிபாவிடம் கொடுத்து விட்டார்கள். அன்னாரே அவரை சிறுவயதிலிருந்தே வளர்த்தார்கள். ஒரு மகள் யாஸ்மின் மலிக் ஆவார்; இவர் கனடாவில் இருக்கின்றார். ஸஃபியா அஹ்மது, இவர் லண்டனில் வசிக்கின்றார். ஸூஃபியா அஹ்மது ரப்வாவில் இருக்கின்றார்; அவர் நாஸிர் கித்மத் தர்வேஷான் மிர்ஸா ஸமது அஹ்மது அவர்களின் மனைவி ஆவார்.

மரியாதைக்குரிய நாஸிர் முஹம்மது சியால் ஸாஹிப் அவர்கள் வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 'ஃபஸ்லே உமர் ஆராய்ச்சி நிறுவனம்' தொடங்கிய போது, அவரை அதில் ஆராய்ச்சிக்காக நியமித்தார்கள். அதன் பிறகு அந்த ஆராய்ச்சி நிறுவனம் மூடப்பட்டபோது ஜமாஅத் அவருக்குத் தனது சொந்தத் தொழிலைச் செய்வதற்கு அனுமதி வழங்கியது.

அன்னாரது மகள் ஸஃபியா எழுதுகின்றார்: தாயார் அவர்கள் ஏழைகள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள். மேலும், அன்னார் எங்கள் மீது அக்கறை கொண்டவராகவும், எங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முயற்சி செய்யக் கூடியவராகவும் இருந்தார்கள் என்று எனக்கு பல மக்களும் எழுதியுள்ளனர். அன்னாரின் குழந்தைப் பருவத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடன் தொடர்புடைய அன்னாரது சில நிகழ்வுகளும் உள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சில கனவுகளும் உள்ளன. அதில் அன்னாரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் அவர்களின் நினைவுகளுடன் சில பழைய வரலாற்றுத் தகவல்களும் வந்து விடுகின்றன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விதிமுறையை பின்பற்றியது மற்றும் ஜமாஅத் ஊழியரின் கௌரவத்தின் மீது அன்னாருக்கு எவ்வளவு அக்கறை இருந்தது? என்பது தொடர்பான ஒரு வீட்டு நிகழ்வை அவர் சுயமே எடுத்துரைத்துள்ளார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் காலணிகள் வெளியே கழற்றி வைக்கப்பட்டிருந்தன. அவை சுத்தம் செய்யப்பட இருந்தன. எனவே, அவர் தனது காலணிகளையும் அங்கேயே கழற்றி வைத்துவிட்டார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் காலணிகளை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தார்கள். 'இது யாருடைய காலணி?' என்று கேட்டார்கள். அன்னார் (ரலி) கோபமாக இருந்ததால் யாரும் எதுவும் சொல்லவில்லை. பிறகு, இறுதியில் அன்னார் (ரலி) கூறினார்கள்: சரி! பரவாயில்லை! இது யாருடையது? என்று கூறுங்கள்; நான் எதுவும் கூற மாட்டேன்.

அவர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மிகவும் செல்லமான மகளாக இருந்தபோதிலும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

'இனிமேல் உன்னால் காலணிகளைத் பாலிஷ் செய்ய முடியாவிட்டால் என்னிடம் கொடுத்துவிடு! ஆனால் ஜமாஅத்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

பணியாளரைக் கொண்டு பாலிஷ் செய்யாதே!'

எப்படியிருந்தபோதிலும், அன்னார் தான, தர்மம் செய்பவராகவும், ஏழைகள் மீது அக்கறை கொண்டவராகவும் இருந்தார்கள். மேலும், ஏழைகளை கருத்தில் கொண்டவராக இருந்தார்கள். கூறுகின்றார்கள்: நான் பழைய கணக்குகளை அன்னாருடைய புத்தகங்களில் இருந்து எடுத்துப் பார்த்தபோது, ஏழைகளின் உதவிக்காக செய்யப்பட்ட ஏராளமான செலவுகள் அந்தக் கணக்கில் எழுதப்பட்டிருந்தன.

இவருக்கு ஏழு வயது இருக்கும்போது, இவரது தாயார் ஹஸ்ரத் மர்யம் ஸாஹிபா (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்:

மர்ஹூமாவை எடுத்துக் கொண்டு நாங்கள் ஷேக் பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் வீட்டுக்குச் சென்றடைந்தோம். அப்போது, அவருக்கும், எனக்கும் மிகவும் செல்லமான மகளான சிறுமி அமத்துல் ஜமீல் இருந்தார்; மொத்தம் ஏழு வயதுடையவராக இருந்தார். அவரை நான் பார்த்தேன்: அவர், அம்மா! அம்மா!' என்று கதறி அழுது கொண்டிருந்தார். நான் அந்தக் குழந்தைக்கு அருகில் சென்றேன். அவரை ஜமீ என்று நேசத்துடன் அழைத்தேன். (நாங்கள் அவரை ஜமீ என்று அழைப்போம்). ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

'அம்மா அல்லாஹ்வின் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள்; அங்கே அவர்களுக்கு அதிக நிம்மதி கிடைக்கும்; தற்போது அவர் அங்கே சென்று விடுவதுதான் அல்லாஹ்வுக்கும் விருப்பமாக இருந்தது. பார்! ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே மரணமடைந்து விட்டார்கள், உன் தந்தை வழிப் பாட்டனார் அவர்களும் மரணமடைந்து விட்டார்கள்; உன்னுடைய அம்மா அவர்களை விடப் பெரியவரா என்ன?என்று நான் அவரிடம் கூறினேன்.

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

என்னுடைய இறைவனின் நிழல் ஒரு நிமிடம் கூட இந்த குழந்தையை விட்டு விலகாமல் இருக்கட்டுமாக! என்று நான் வேண்டினேன். எனது இந்த வாசகத்திற்குப் பிறகு, அவர் தாய்க்காக இன்று வரை கூச்சலிடவில்லை. இந்த வாசகத்தைக் கேட்டவுடன் அவர் முற்றிலும் அமைதியாகிவிட்டார். இன்னும் கூறப்போனால், மறுநாள் ஜனாஸாவின் நேரத்தில், அவரது மூத்த சகோதரி அதிர்ச்சியில் அலறி மயக்கமடைந்தபோது, எனது இளைய மனைவி மர்யம் ஸித்தீகா அவர்களிடம் சென்று எனது ஜமீ கூறினார்: அக்கா!

ஹஸ்ரத் மர்யம் ஸித்தீகா ஸாஹிபா அவர்களை பிள்ளைகள் அக்கா என்று அழைத்து வந்தனர்.

ஆக, அவர் கூறினார்: அக்கா! சகோதரி எவ்வளவு பைத்தியமாக இருக்கிறார்! அம்மா இறந்ததில் அல்லாஹ்வின் விருப்பம் இருக்கின்றது என்று அப்பா கூறுகிறார்கள். ஆனாலும் இவர் அழுது கொண்டிருக்கிறார்.

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

**'எனது இறைவா! எனது இறைவா! எவருடைய சிறிய குழந்தை உனது திருப்திக்காகத் தனது தாயின் மரணத்திலும் துக்கப்படவில்லையோ அவரை நீ மறுமையில் எல்லாத் துன்பங்களிலிருந்தும் பாதுகாப்பாக வைக்க மாட்டாயா என்ன !**

பிறகு ஹஸ்ரத் மர்யம் ஸாஹிபா, ஹஸ்ரத் உம்மே தாஹிர் ஸாஹிபாவுக்காக அன்னார் (ரலி) இவ்வாறு துஆ செய்தார்கள்.

என் கருணையுள்ள இறைவனே! உன்னிடம் இத்தகைய நம்பிக்கை வைப்பது உனது அடியார்களின் உரிமையாகும், மேலும் இந்த நம்பிக்கையை நிறைவேற்றுவது உனது மகத்துவத்திற்குத் தகுந்ததாகும்.' (மேரி மரியம், அன்வாருல் உலூம் தொகுதி 17, பக்கம் 365-366)

எப்படியிருப்பினும், சந்தாக்கள் போன்றவற்றை முறையாக செலுத்தி வந்தார்கள். சொத்துக்கள் தொடர்பான வரவு செலவு கணக்குகளை இறப்பதற்கு முன்பே சரிசெய்து வைத்திருந்தார்கள். அண்டை வீட்டார் இறந்தால் அவர்களின் வீடுகளுக்குத் தவறாமல் உணவு அனுப்பி வைப்பார்கள். எப்போதும் வந்து செல்பவர்களிடம் கூறி வந்தார்கள். 'எனது முடிவு சிறப்பானதாக அமைய துஆ செய்யுங்கள்' என்று என்னிடமும் அன்னார் பலமுறை கூறினார்கள்.

அன்னாருடைய மகள் வழிப்பேத்தி நுஸ்ரத் கூறுகின்றார்: 'பாட்டி தொழுகை நேரத்திற்கு முன்பே தயாராகி அமர்ந்து கொள்வார்கள். மிகுந்த ஆவலுடன் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். அன்னார் நீண்ட நேரம் துஆ செய்வார்கள். இன்னும் கூறப்போனால், தான் யாருக்காக துஆ செய்ய வேண்டும் என்று ஒரு பட்டியலையே தயாரித்து வைத்திருப்பார்கள்.

கூறுகின்றார்: எனக்கு சிறு வயதாக இருந்தது. எனவே அப்போது என் பாட்டியின் நீண்ட மற்றும் அழுகையுடன் கூடிய துஆக்களைக் கேட்டு நான் பயந்து விடுவேன், ஆனால் எப்படியிருப்பினும் அன்னார் மற்றவர்களுக்காகவும் துஆ செய்து வந்தார்கள்.

அன்னாருடன் தொடர்புடைய சில பழைய நினைவுகள் உள்ளன ; நிகழ்வுகளும் உள்ளன என்று நான் கூறியது போன்று, ஹஸ்ரத் ஹாதி அலீ ஸாஹிப் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சில கனவுகளும் இருக்கின்றன.

எப்படியிருப்பினும், ஹஸ்ரத் ஹாதி அலீ ஸாஹிப் அறிவிக்கின்றார்கள்: அன்னார் (அதாவது மர்ஹூமா) என்னிடம் இவ்வாறு கூறினார்கள்:

ஒருமுறை நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தேன், ஹுஸூர் (ரலி) அவர்களுடன் பின் இருக்கையில் அமர்ந்திருந்தேன். கூறுகின்றார்கள்:

ஹுஸூர் (ரலி) அவர்கள் தமது விரல்களால் ஏதோ ஒன்றை மீண்டும், மீண்டும் எண்ணிக் கொண்டிருப்பதை நான் கவனித்தேன். அப்போது, 'அப்பா ஜான்! தாங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்? என்று நான் கேட்டேன், அதற்கு ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'நான் உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள நமது முபல்லிஃக்மார்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்து கொண்டிருக்கிறேன். உலகம் முழுவதும் எனக்குக் குறைந்தது இத்தனை லட்சம் முபல்லிஃக்மார்கள் தேவை; அப்போதுதான் நாம் உலகிற்கு உண்மையான இஸ்லாத்தைப் பற்றித் தெரிவிக்க முடியும்.

ஆக, இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் துடிப்பாக இருந்தது.

அன்னாருடைய சில அறிவிப்புகளும் உள்ளன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கனவு ஒன்றும் உள்ளது, அது அவர்களுடன் தொடர்புடையது என்பதால் அதை நான் எடுத்துரைக்கிறேன். ஜூன் 1948-ல் கண்ட கனவாகும்.

அன்னார் (ரலி) கூறினார்கள்: 'நான் ஜூன் மாதம் சிந்து மாகாணத்தில் உள்ள நாஸிராபாத்தில் இருந்தேன். அங்கே ஒரு மினாரா இருப்பதைக் கண்டேன். அது மிகவும் உயரமாகவும், வெள்ளையாகவும் காதியான் மினாராவின் வடிவிலும் இருந்தது. அதன் கீழ் பகுதியில் வாசலுக்கு அருகில் என் மகள் அமத்துல் ஜமீல் அமர்ந்திருந்தார். அவர் மிகவும் நிதானமாக பால்கனியில் இருந்து தனது கால்களைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார். இதற்கிடையில் எனது பார்வை மினாராவின் மீது விழுந்தது. மினாராவின் மிக உயர்ந்த பகுதியிலிருந்து, அதாவது மேல் மட்டத்திலிருந்து கீழ் நோக்கி ஒரு பெரிய பாம்பு ஊர்ந்து செல்வதைக் கண்டேன். அது பல அடி நீளமானதாகவும், ஒன்றரை அடி தடிமனான பச்சை நிறப் பாம்பு ஆகும். அது மேல் தளத்திலிருந்து கீழ் தளத்தை நோக்கி வந்து

கொண்டிருந்தது. அது அங்கிருந்து இறங்கி, அதே போன்று கீழ் தளத்திற்கு வந்து சேர்ந்தது. சுருக்கமாக எடுத்துரைத்து விடுகிறேன். இதன் விவரமோ மிகவும் நீண்டதாகும். இறுதியில் அந்தப் பாம்பு மிகக் கீழ் தளத்திலிருந்து மேல் தளத்திற்குச் சென்று, அங்கிருந்து மீண்டும் கீழ் தளத்தின் கூரையை நோக்கித் திரும்பியது. அந்த நேரத்தில் இந்த எண்ணம் எனது உள்ளத்தில் தோன்றியது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த எண்ணம் என் உள்ளத்தில் தோன்றியது. அதாவது, 'அமத்துல் ஜமீல்' மாடிப்படியில் வாசலுக்கு அருகே அமர்ந்திருக்கிறார்; அந்தப் பாம்பு அவரை நோக்கித் திரும்பி கடித்துவிடக் கூடாதே ; ஒருவேளை அவர் பயந்து கீழே விழுந்துவிட்டால் அவருக்குக் காயம் ஏற்பட்டு விடுமே என்று நான் அஞ்சுகிறேன். அப்போது நான் மிகுந்த உருக்கத்துடன் அல்லாஹ்விடம் துஆ செய்யத் தொடங்கினேன்.அதன் இந்த சொற்றொடர் எனக்கு இன்றும் நினைவிருக்கிறது:

اَللّٰهُمَّ اَعِذْهَا لِيْ وَلِلْجَمَاعَةِ
الْاَحْمَدِيَّةِ وَلِغُرَبَائِهَا

பொருள்: அல்லாஹ்வே! எனக்காகவும், அஹ்மதிய்யா ஜமாஅத்திற்காகவும் மேலும் அதன் மக்ககளுக்காகவும் இவருக்கு இந்த ஆபத்திலிருந்து இரட்சிப்பு வழங்குவாயாக.'

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: அரபு மொழியில் 'குர்பா' என்றால் பயணிகள் என்று பொருள், உருது மொழியில் அதன் பொருள் ஏழைகள் என்பதாகும். இந்த இடத்தில் உருது மரபுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? அல்லது அரபு மரபுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை அல்லாஹ்வே நன்கு அறிவான். இதில் சில பயணிகளை நோக்கியும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது..

எப்படியிருப்பினும் கூறுகின்றார்கள்: நான் துஆ செய்து கொண்டிருந்தேன். மேலும்,

'அமத்துல் ஜமீல்' தானாகவே ஆபத்தை உணர்ந்து மாடிப்படியிலிருந்து நகரத் தொடங்கியதை நான் கண்டேன். அவர் நகர்ந்து, நகர்ந்து பல அடி தூரம் வாசலில் இருந்து விலகிச் சென்று விட்டார். அதற்குள் அந்தப் பாம்பு வாசலில் இருந்து இறங்கி ஜமீலை நோக்கித் திரும்பியது. ஆனால் அவர் சற்றுத் தள்ளி இருந்ததால், பாம்பு அவரைத் தொடராமல் தரையை நோக்கி இறங்கிச் சென்றது.

அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: இந்தக் கனவு வெளிப்படையில் சிறுமிக்கு மிகவும் அருளுக்குரியதாகும். ஏனெனில் இதில் துஆ உள்ளது. அது எனக்கு குளிர்ச்சிக்கு காரணியாக இருப்பதோடு மட்டுமின்றி, ஜமாஅத்திற்கும், மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும். அல்லாஹ்வே நன்கு அறிந்தவன்.

( ரூஃயா வ கஷூஃப் ஸய்யிதினா மஹ்மூத், பக்கங்கள் 416-417) (அல் ஃபஸ்ல் இதழ், தொகுதி 2, எண் 287, தேதி 19 டிசம்பர் 1948, பக்கம் 3)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் இன்னும் சில கனவுகள் உள்ளன, அதில் அன்னாரைப் பற்றிய குறிப்பு உள்ளது. அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

இரண்டாவது எடுத்துரைக்க உள்ள ஜனாஸா குறிப்பு ஹாலந்தைச் சேர்ந்த டாக்டர் ரஷீத் அஹ்மத் கான் சாஹிப் அவர்களுடையதாகும். இவர் மதிப்பிற்குரிய நிஸாமுத்தீன் ஸாஹிப் அவர்களின் மகனாக இருந்தார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு இவர்கள் தமது 91-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

انا لله وانا اليه راجعون

அல்லாஹ்வின் அருளால் அவர் வஸிய்யத் செய்தவராக இருந்தார். அன்னாருக்கு நான்கு மகன்களும், நான்கு மகள்களும் உள்ளனர். டாக்டர் ரஷீத் ஸாஹிபின் தந்தை நிஸாமுத்தீன் ஸாஹிப் ஸர்ஹத் மாநிலத்தின் முன்னாள் அமீர் டாக்டர் ஃபத்ஹே தீன் ஸாஹிப் அவர்களின் இளைய சகோதரர் ஆவார்கள்.

இவர்களின் மூலமாகவே இவர்களுடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. 1905-ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் லூதியானாவில் ஒரு சொற்பொழிவாற்றினார்கள். அந்த நேரத்தில் டாக்டர் ஃபத்ஹே தீன் ஸாஹிப் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒருபோதும் அங்கு அன்னாருடைய சொற்பொழிவைக் கேட்க செல்ல கூடாது; இவர் ஒரு மந்திரவாதி ஆவார்; உங்களைக் கவர்ந்து விடுவார்' என்று கூறி பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களைக் கடுமையாகத் தடுத்திருந்தார்கள். இறைத்தூதர்கள் மீது எப்போதும் சுமத்தப்படும் அதே குற்றச்சாட்டைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீதும் மௌலவிகள் சுமத்திக் கொண்டிருந்தார்கள்.

எப்படியிருப்பினும் இவர்கள் கூறுகின்றார்கள்: ஃபத்ஹே தீன் ஸாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத்(அலை) அவர்களின் சொற்பொழிவைக் கேட்கச் சென்று விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே, இவர்கள் உண்மையாளர் ஆவார்கள் என்ற நம்பிக்கை இவ்வளவு சிறிய வயதில் அவருக்கு ஏற்பட்டு விட்டது. எனவே, பிற்காலத்தில் 1914-ஆம் ஆண்டில் தமது கல்வியை முடித்த பிறகு, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் அவர்கள் பைஅத் செய்தார்கள். அவர்கள் மிகவும் நற்பண்புகள் கொண்டவராக இருந்தார்கள்.

மர்ஹூம் ரஷீத் ஸாஹிபும் மிகச் சிறந்த நற்குணங்களைக் கொண்டவராக இருந்தார்கள். மென்மையான சுபாவம், அனைவரிடமும் அன்பாகப் பழகுதல், இறைவனுக்கு அஞ்சுதல் மற்றும் இரக்க குணம் கொண்டவராக இருந்தார்கள். மற்றவர்களுக்காகத் தன்னை வருத்திக் கொள்பவராக இருந்தார்கள். மிகவும் தைரியமானவராகவும், வீரமிக்கவராகவும், கிலாஃபத்தின் மீது அதீத பற்று கொண்டவராகவும், எப்போதும் எத்தகைய தியாகத்திற்கும் தயாராக இருப்பவராகவும் இருந்தார்கள். ஏழைகளைப் பராமரிப்பதிலும், தேவையுடையவர்களுக்கு யாருக்கும் தெரியாமல் உதவி செய்வதிலும் அவர்கள் சிறந்தவராக இருந்தார்கள். பல புதிய அஹ்மதிகள் மீது எதிரிகள் பொய் வழக்கு தொடுத்து வந்தனர்; அவர்களுக்கு பிணை வாங்கிக் கொடுப்பதற்காக சென்று விடுவார்கள். ஃபுர்கான் படையிலும் பங்கெடுத்துள்ளார்கள்.

அன்னாரையும், அன்னாருடைய மாமனார் அப்பாஸ் கான் ஸாஹிப் மற்றும் அன்னாருடைய சகோதரர் மன்சூர் ஸாஹிபையும் ஸர்ஹத் மாகாணத்தில் . ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவர்களை 'வக்ஃபே ஜதீத்' திட்டத்தின் கீழ் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார்கள். அன்னாருக்கு இத்தகைய ஒரு நற்பேறும் கிடைத்தது பழைய அஹ்மதி குடும்பங்களுடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்தி, அங்கு தப்லீஃக் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி, அவர்கள் இந்தப் பணியை மிகவும் சிறப்பாகச் செய்தார்கள்.

அன்னாருக்கு தப்லீஃக் செய்வதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. தவ்லத் கான் ஸாஹிப் என்ற ஒரு நண்பருக்கு தப்லீஃக் செய்தார்கள். அப்போது அவர் பைஅத் செய்தார். அதனால், அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. அனனார் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் அவர் கைதும் செய்யப்பட்டார். அவருக்குப் பிணை எடுக்க யாரும் முன்வரவில்லை. ஜாமீன் தொகையை ஏற்க யாரும் முன்வராத நிலையில், டாக்டர் ரஷீத் ஸாஹிப் அவர்களே தமது மருமகனை அழைத்துக் கொண்டு அங்கு சென்றார்கள். அங்கு ஐந்தாயிரம் மௌலவிகளின் ஊர்வலம் நடந்து கொண்டிருந்தது. அவர்கள் இவர்கள் மீது கற்களை

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்..

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம் குறித்த மனம் கவர் கோணத்தில் நற்குறிப்புகள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 பிப்ரவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**5** ஆண்டு **தப்லீஃக்** மாத**ம் 06 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இறை வணக்கம் எப்படி இருந்தது? அன்னார் (ஸல்) காடுகளுக்கும், மேலும், கொடிய விலங்குகள், பாம்புகள் இருக்கும் இடங்களுக்கும் அதாவது எங்கு ஆபத்து இருந்ததோ அங்கு சென்று வந்தார்கள்.

அங்கு சென்று அன்னார் (ஸல்) துஆ செய்து வந்தார்கள் என்று இதனை பற்றி முன்னர் எடுத்துரைக்கப்பட்டு விட்டது.

இந்த விஷயத்தை அன்னார் (அலை) எடுத்துரைக்கின்றார்கள்:

ஒரு பக்கம் இறைவனை நோக்கிய ஆர்வம் அதிகரித்து விடும்போது, மறுபக்கம் உள்ளத்திலிருந்து அச்சம் அகன்று விடுகின்றது. அல்லாஹ்வின் மீதான நேசம் அதிகரித்து விடும்போது, மேலும் அவனது இறை வணக்கத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டு விடும்போது, பின்னர் உலக பொருட்களின் மீதான பயம் நீங்கி விடுகின்றது. அன்னார் (அலை) ஓர் உதாரணம் வழங்கியுள்ளார்கள்: சில பெண்கள் உள்ளனர்; அதாவது எவர்களின் இயல்பில் மிகவும் அச்சம் இருக்குமோ அவர்கள் இருட்டில் தனியாகச் செல்லப் பயப்படுவார்கள்; ஆனால் தன் குழந்தை நோய்வாய்ப்பட்டு அதற்கு மருந்து தேவைப்படும்போது, அதே இருட்டில், பகலில் செல்வதற்கே அவர்கள் அஞ்சி வந்த அந்த இடங்களில் அச்சமின்றி சென்றுவிடுவதை பார்க்க முடிகின்றது.

கூறுகின்றார்கள்: இறையச்சமும், இறை நேசமும் மேலோங்கி விடும்போது, மற்ற எல்லா அச்சங்களும், நேசங்களும் மறைந்துவிடுகின்றன.

அத்தகைய துஆவிற்கு தனிமையும் அவசியமாகும். இதே முழுமையான தொடர்புடன் ஒளிகளும் வெளிப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு தொடர்பும் ஒரு இரகசியத்தை விரும்புகின்றது. அதாவது மறைமுக தொடர்பு இருக்கின்றது. அப்போதுதான் அது வெளிப்படுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 186, 2022-ம் ஆண்டு பதிப்பு)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறை வணக்கம் என்பது இறைவனுக்காக மட்டுமே இருக்க வேண்டும். அது பகட்டாக இருக்கக் கூடாது. கீழ்ப்படிதல், இறை வணக்கம் மற்றும் சேவை ஆகியவற்றில் ஒருவர் பொறுமையுடன் செயல்பட்டால், பின்னர் இறைவன் அவரை ஒருபோதும் வீணாக்க மாட்டான். இஸ்லாத்தில் ஆயிரக்கணக்கானோர் அப்படித் தோன்றியுள்ளனர், அவர்களின் ஒளியால் மட்டுமே மக்கள் அவர்களை அடையாளம் கண்டுகொண்டனர்; மாறாக, ஏமாற்றுக்காரர்களைப் போன்று சிறப்பு உடைகளுக்கும் அல்லது நீண்ட அங்கிகளுக்கும் மேலும் சிறப்பாக தங்களை வேறுபடுத்திக் காட்டும் உடைகளுக்கும் அவர்களுக்கு அவசியம் இருப்பதில்லை.

உண்மையாக இறைவனை அடைந்தவர்கள் அத்தகைய சீருடைகளை அணிந்ததில்லை'. ஏனெனில், ஒரு நீண்ட அங்கியையோ அல்லது ஒரு போர்வையையோ அணிந்துகொண்டு, தன்னை ஒரு பெரிய துறவியாகவும் அல்லது ஒரு பெரிய 'சூஃபியாகவும் அல்லது தாம் மிகவும் நல்லவர் என்று அவர்கள் கருதியதில்லை.

தம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடிய அத்தகைய எந்தவொரு சிறப்பான உடையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்ததில்லை. ஒருமுறை ஒருவர் அபூ பக்ர் (ரலி) அவர்களை இறைத் தூதர் என்று தவறாகக் கருதி அன்னாரிடம் கை குலுக்கினார்; மேலும், மரியாதை செய்யத் தொடங்கினார். இறுதியில், அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சாமரம் வீசத் தொடங்கி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் இவர்கள் ஆவார்கள்; மேலும் நானோ சேவகன் ஆவேன் என்பதை தமது கூற்றால் அல்ல; மாறாக, தமது செயலால் உணர்த்தினார்கள்.

மனிதன் இறைவனை வணங்கும்போது வண்ணமயமான ஆடைகளை அணிவதற்கும், ஒரு குறிப்பிட்ட தோற்றத்தை உருவாக்குவதற்கும், அல்லது கழுத்தில் மாலைகளை அணிவதற்கும் என்ன அவசியம் இருக்கின்றது?

அதாவது சிலர் கழுத்தில் நீண்ட மாலைகளை அணிந்து கொள்கின்றனர்; மேலும் கைகளில் நீண்ட நெடிய தஸ்பீஹ் மாலைகள் இருக்கின்றன. 'இத்தகைய நபர்கள் உலகத்தின் நாய்களாக இருக்கின்றனர். இவர்களோ உலக வாதிகளாக இருக்கின்றனர்; இவர்கள் இறை நேசர்கள் அல்ல.

இறைவனைத் தேடுபவர்களுக்கு அத்தகைய சிறப்பு ஆடைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கும், சீருடை அணிவதற்கும் எங்கே கவனம் இருக்கும்? அவர்களோ மக்களின் பார்வையில் இருந்து மறைந்திருக்கவே விரும்புகிறார்கள். சில சமயங்களில் இறைவன் தனது ஞானத்தின் அடிப்படையில், (தனது இறைத் தன்மையை நிறுவுவதற்காக) அவர்களை உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டுகிறான்.

மக்கள் தம்மை 'நபி' என்று அழைக்க வேண்டும் என்றோ அல்லது தமக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. எனவேதான் அன்னார் (ஸல்) மண்ணறையை விட குறுகியதாக இருந்த ஒரு குகைக்குச் சென்று இறைவனை வணங்கி வந்தார்கள். அங்கிருந்து வெளியே வர வேண்டும் என்ற எண்ணம் அன்னாருக்கு ஒருபோதும் இருந்ததில்லை. இறுதியில், இறைவனே தனது ஞானத்தால் அன்னாரை தானே வெளியே கொண்டு வந்து, அன்னார் (ஸல்) மூலம் தனது ஒளியை உலகிற்கு வெளிப்படுத்தினான்.

இந்த ஒளியிலிருந்து பயன் பெறுவதற்கு இறைவன் நமக்கு நற்பேறு வழங்குவானாக! இறை வணக்கத்திற்குரிய உரிமையைச் செலுத்துவதற்கும், அன்னாரின் அழகிய முன்மாதிரியை மேற்கொள்வதற்கும் அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக! மேலும் அன்னாரின் அழகிய முன்மாதிரியின்படி நடப்பதற்கும், உண்மையான வடிவில் வழிநடக்க முயற்சி செய்வதற்கும் அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

தமிழாக்கம்

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்




* * * * * * *

10-ம் பக்கத் தொடர்ச்சி..... (குத்பா பேருரை 6.3.26)

ஏறியத் தொடங்கினார்கள்.

அவருடைய மருமகனின் தலையில் ஒரு கல் பட்டது, பிறகு அவர் கீழே விழுந்தபோது அவரை அடித்தார்கள். இறுதியில் அவர் அங்கேயே ஷஹீதானார். மேலும் இவ்வாறு செய்து நாங்களோ நற்கூலியைப் பெறுகிறோம் என்பது அந்த ஷைத்தான்களின் செயலாக இருந்தது. அதன்படி போலீஸாரும் செயல்பட்டனர். பிறகு, நாங்களும் நற்கூலியை பெறுகிறோம் என்று கூறி போலீஸாரும் அந்த சடலத்தை காலால் உதைக்கத் தொடங்கினர்.

எப்படியிருந்தாலும், அவர்கள் அவரையும் அடித்து, அவருடைய உடலின் கிட்டத்தட்ட அனைத்து எலும்புகளையும் உடைத்துவிட்டார்கள். பல காயங்கள் ஏற்பட்டன. அந்த அடையாளங்களை நான் பின்னரும் பார்த்திருக்கிறேன். முகத்திலும் அடையாளங்கள் இருந்தன, கைகள் போன்றவை முறுக்கப்பட்டிருந்தன. இதே காயங்களினால் முறுக்கப்பட்டிருந்தன. ஆனால் அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான், அவர்களை அடித்து, அடித்து ஒருகட்டத்தில் அவர்கள் இறந்துவிட்டதாகக் கருதி அப்படியே விட்டுவிட்டுச் சென்றனர். பின்னர் போலீஸார் அவர்களுடைய உடலை எடுத்துச் சென்றனர். மருத்துவமனைக்கு அருகில் வந்தபோது, 'நான் உயிரோடு இருக்கிறேன்; என்னை இன்ன

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 30 APR 2026 Issue No. 18

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இடத்தில் கொண்டு போய் விடுங்கள்' என்று அவர்கள் கூறினார்கள். எப்படியிருந்தாலும், மருத்துவர்கள் அவர்களைப் பார்த்தபோது, இவர் எப்படி உயிரோடு இருக்கிறார்? என்று அவர்களுக்கே ஆச்சரியமாக இருந்தது. எப்படியிருந்தாலும், அல்லாஹ் அவர்களை உயிரோடு வைத்திருக்க நாடினான். அந்த காயங்களுக்குப் பிறகும் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் உயிரோடு இருந்தார்கள். மேலும் மிகவும் (active) சுறுசுறுப்பாக இருந்தார்கள்.

எப்படியிருந்தாலும், போலீஸாரிடம் அவர்கள் 'என்னை பெஷாவருக்குக் கொண்டு போய் விடுங்கள்' என்று கூறினார்கள். அங்கு போலீஸார் எதிராக இருந்ததால், அவர்களை அங்கு கொண்டு சேர்ப்பது கடினமாக இருந்தது. ஆனால் சிலருக்குப் பணத்தினால் லாபம் கிடைக்கும்போது, போலீஸாருக்குப் பணம் கொடுத்தால் வேலை முடிந்துவிடும். அவர்கள் கூறினார்கள், 'உங்களுக்கு என்ன பணம் வேண்டுமோ அதை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள், ஆனால் என்னை அங்கே கொண்டு சேர்த்து விடுங்கள்'. எவ்வாறிருப்பினும், அந்த போலீஸ் அதிகாரி சம்மதித்து அவர்களை பெஷாவருக்குக் கொண்டு சேர்த்தார். பின்னர் அவர்கள் ரப்வாவிற்கு வந்தார்கள், அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் அல்லாஹ் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையைக் கொடுத்தான். அவர்கள் ஒரு கட்டத்தில் பிணவறைக்குக் கொண்டு செல்லப்பட இருந்தார்கள், ஆனால் அல்லாஹ் அவர்களை அதன்பிறகு முப்பது ஆண்டுகள் வரை உயிரோடு வைத்து, மிகச் சுறுசுறுப்பாக (active) வைத்தான். அவர்கள் ஹாலந்திலும் இருந்தார்கள். அங்கும் ஜமாஅத் பணிகளைச் செய்து வந்தார்கள். 1974-ல் எதிரிகள் அவர்கள் மீது கைத்துப்பாக்கியை நீட்டியபோது, அப்போதும் அவர்கள் மிகுந்த தைரியத்துடன் மௌலவிகளிடம் கூறினார்கள்:

'இந்த கலிமாவை ஓதி முஸ்லிமாகிவிடு' என்று அவர்கள் கூறியபோது, 'லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதை நான் உங்களுக்கு முன்பே ஓதிக் கொண்டிருக்கிறேன். இதுதான் எனது நம்பிக்கையாகும். நான் எப்படி (மீண்டும்) முஸ்லிமாவேன்?' என்று அவர்கள் கூறினார்கள். (எதிரிகளாகிய) அவர்கள் 'மிர்ஸா ஸாஹிபைத் திட்டுங்கள்' என்று கூறினார்கள். அவர்கள் கூறினார்கள், 'நான் திட்டமாட்டேன். இது ஒன்றும் இஸ்லாம் கிடையாது.' இதற்குப் பிறகு அவர்கள் கூறினார்கள், 'நானோ துரூத் ஓதுபவன் ஆவேன்; மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளைப் பின்பற்றுபவன் ஆவேன். என்னால் இது போன்ற செயல்களைச் செய்ய முடியாது.

பின்னர் அவர்கள் கூறினார்கள், நான் அவர்களுக்கு ஒரு ஸஹாபியின் சம்பவத்தைக் கூறினேன். அதாவது, உஹதுப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீத் ஆகிவிட்டதாக வதந்தி பரவியபோது, அந்தத் தோழர் கூறினார்: எனக்கும், சொர்க்கத்திற்கும் இடையில் ஒரு பேரீச்சம்பழம் தான் தடையாக உள்ளது; மேலும் அந்தப் பழத்தை ஒரு பக்கம் வீசி எறிந்துவிட்டு எதிரிகளின் மீது தனியாகச் சென்று தாக்குதல் நடத்தினார். அவரது உடல் துண்டு துண்டாகி விட்டது. கூறுகின்றார்கள்: இந்தச் சம்பவத்தை நான் அவர்களுக்கு கூறினேன்: மேலும், நான் கூறினேன்: 'எனக்கும் உங்களுக்கும் இடையில் இப்போது அந்தப் பேரீச்சம் பழம் கூட தடையாக இல்லை, ஏனென்றால் நீங்கள் எனது நெஞ்சில் துப்பாக்கி வைத்துள்ளீர்கள்; நீங்கள் அதனை அழுத்தி என்னை ஷஹீதாக்கி விடுங்கள். ஆனால், வாக்களிக்கப்பட்ட மஸீஹை' ஏசிபேசுங்கள் என்று நீங்கள் கூறும் இந்த விஷயங்களை நான் செய்ய மாட்டேன். அவர்கள் மிகுந்த துணிச்சலை வெளிப்படுத்தினார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! மேலும் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக! அவர்களின் குழந்தைகளுக்கும் நற்செயல்களை நிலைநாட்டும் நற்பேறை வழங்குவானாக!

மூன்றாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய ஜைனப் பீபி ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் முன்னாள் ஜமாஅத் தலைவரும், சக் 275 கர்தார்பூர் பள்ளியின் இமாமுமாகிய மர்ஹூம் பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு 85 வயதில் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

اناللهوانااليهراجعون

அன்னார் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். அவர்களின் தந்தை முஹம்மது ஸாஹிப், பைஸலாபாத் தாருல் திக்ர் மஸ்ஜிதின் சேவகராக இருந்தார். அவர்கள் அதிக துஆ செய்பவராகவும், தஹஜ்ஜுத் தொழுபவராகவும், ஐவேளைத் தொழுகையை முறையாகப் பேணுபவராகவும், தினமும் குர்ஆன் ஓதுபவராகவும், விருந்தோம்பல் செய்பவராகவும், கிலாஃபத் மீது ஆழ்ந்த பற்று கொண்டவராகவும், நற்குணம் கொண்டவராகவும் இருந்தார்கள். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். ஜுமுஆ உரையை மிகுந்த கவனத்துடன் கேட்டுவிட்டு, வீட்டில் உள்ளவர்களையும் அழைத்து வந்து அதைச் சொல்லிக் காட்டுவார்கள்.

அவர்களுக்கு மூன்று மகன்களும், நான்கு மகள்களும் உள்ளனர். பல பேரன்மார்களும், பேத்திமார்களும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களாக உள்ளனர். அவர்களின் ஒரு மகள் அமத்துர் ரஷீத் ஸாஹிபா, ஜாம்பியாவின் லூசாகாவில் முபல்லிஃக் ஆக இருக்கும் தாஹிர் அஹ்மத் ஸைஃபி ஸாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். இன்றைய நாட்களில் அவர்கள் லூசாகாவில் தான் இருந்தார்கள்; அன்னாருடைய தாயார் காலமான போது அந்த மகளும் தமது தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அங்கு செல்ல முடியவில்லை. ஜனாஸாவை பார்க்க முடியவில்லை.

அல்லாஹ் அவர்களுக்கும் பொறுமையையும் மனவலிமையையும் வழங்குவானாக! மேலும் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

(அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல் இதழில் பிரசுரிக்கப்பட்டது, 27 மார்ச் 2026)

தமிழாக்கம்
முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**
**தொலைபேசி எண் : 1800 103 2131**
இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad